# 1989 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

[1989, மே மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**1989 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடுசெய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்த நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில முயற்சிகள் தொடர்பில் நிதி ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச்செய்வதற்கும், திரட்டுநிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், அத்துடன் மேற்சொல்லப்பட்ட கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமான ஒரு சட்டம்.**

1. இச்சட்டம் 1989 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தில், ''நிதியாண்டான 1989 ஆம் ஆண்டு'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும், 1989 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் தேதி தொடங்கி 1989 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கான சேவைக்காக எண்ணாயிரத்து முன்நூற்றி ஐம்பத்தி நான்கு கோடி முப்பத்தி மூன்று இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது, செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி—

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும் பெறப்படல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ, வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும் பெறப்படல் வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியின் கூட்டு மொத்தத் தொகையானது நாலாயிரத்து எண்ணூற்றித் தொண்ணூற்றெண்பது கோடி முப்பது இலட்சம் ரூபாவினை விஞ்சுதலாகாது.

இதன்கண், முன்னர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எண்ணாயிரத்து முந்நூற்றி ஐம்பத்திநான்கு கோடி முப்பத்திமூன்று இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரம் ரூபா கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றிப் பயனுடையனவாதல் வேண்டும்.

3. (1) நிதியாண்டான 1989 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் பெறுகைகள், அத்தகைய முயற்சிகளின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வரவு வைக்கப்படும் பெறுகைகளின் கூட்டுமொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் 111 ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லையிலும் பார்க்கக் குறைந்ததாக இருத்தலுமாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மேன்மிகை ஏதேனுமிருப்பின், அத்தேறிய மேன்மிகையானது நிதியாண்டான 1989 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தேறிய மேன்மிகையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காகப் பின்வரும் கட்டணங்கள், அவையாவன:—

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி பொறுப்பாக்கப்படற்பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ்சரி அல்லது சேர்மானமானவையாயினுஞ்சரி, முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன, மற்றும் ஏனைய செலவுகள்; அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு

என்பன, ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப்படல் வேண்டும்.

(3) நிதியாண்டான 1989 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின் பேரிலும், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம், அந்த நிதி ஆண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகளிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும். ஆனால், அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் 11 ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

(4) நிதியாண்டான 1989 ஆம் ஆண்டின் முடிவில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் 1V ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது. அத்துடன் அந்த நிதியாண்டின் முடிவில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புகள், அந்த அட்டவணையின் V ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

4. நிதியாண்டான 1989 ஆம் ஆண்டின்போது எப்போதேனும் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள எவையேனும் முயற்சிகளிலிருந்து அரசாங்கம் பெறும் பெறுகைகள், அத்தகைய முயற்சியின்மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினங்களைச் சமாளிப்பதற்குப் போதியனவாயிராவிடின், அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத்

திரட்டுநிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டுமெனக் காலத்துக்குக்காலம் கட்டளைமூலம் பணிக்கலாம். எவ்வாறாயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டு மொத்தத்தொகை, அந்த அட்டவணையின் 11 ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக்கூடிய எல்லையை விஞ்சாதிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி சம்பந்தமாக அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சராற் கட்டளை மூலம் பணிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் திரட்டுநிதியத்துக்கு மீண்டும் மீளளிக்கப்படுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும், மீண்டுவரும் செலவினத்திற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்து, ஆனால் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்டளைமூலம் அந்நிகழ்ச்சித்திட்டத்திற்குட்பட்ட ஆக்கப்பொருட் செலவினத்திற்கெனச் செய்யும் பகிர்வுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீண்டுவருஞ் செலவினம் அல்லது ஆக்கப்பொருட் செலவினம் என்ற பகிர்வுக்கு மாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித்திட்டமெதன்கீழும் ஆக்கப்பொருட் செலவுக்குப் பகிரப்பட்டுள்ள பணங்களெவையும் அப்பகிர்விலிருந்து வேறெதற்கும் மாற்றப்படல் ஆகாது.

6. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் பெறுகைகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கென எதிர்பார்க்கப்பட்ட பணத் தொகைகளையும் விடக் குறைவாயிருக்குமென; அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாவென,

அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப் பெறலாம்.

7. (அ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 11 ஆம் நிரையிலும் 1V ஆம் நிரையிலும் V ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும்,

(ஆ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 111 ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளுள் எதனையும்,

அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 1990 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளைமூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

இப்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும் பாராளுமன்றத்தினாலான தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றிப் பயனுடையதாதலாகாது.

அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன் கண் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடியதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப் படல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது, தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இரண டாம் அட்டவணையை, அட்டவணையின் தோதான நிரைகளுக்கு ஏதேனும் முயற்சியையும் அத்துடன்—

(அ) அத்தகைய முயற்சி தொடர்பிலான எல்லா ஆக்கக்கூடிய எல்லைகளை யும் அல்லது அவற்றுள் எவற்றையும்;

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையையும்,

சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

9. ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு சனவரி 01 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முன்னரான நாளன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின் சேவைக்காக நிதியேற்பாடு செய்து 1988 ஒற்றோபர் இருபத்தெட்டாம் தேதியன்று பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் எது எப்படியிருப்பினும்—

(அ) அத்தீர்மானத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்ட ஏதேனும் தலைப்பின் கீழ்த் தோன்றுகின்ற ஏதேனும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அத்தீர்மானத்தினால் குறித்தொதுக்கப்பட்ட பணங்களி லிருந்து அக்காலப்பகுதியின் போது செலவிடப்பட்டிருந்த எவையேனும் பணத்தொகைகள், எல்லா நோக்கங்களுக்காகவும், அத்தீர்மானத்தின் அதிகாரத்தின் கீழ்ச் செலவிடப்பட்டிருக்கவில்லையென்றும், ஆனால்; இச்சட்டத்தின் அதிகாரத்தின் கீழ்ச் செலவிடப்பட்டிருந்தனவென்றும் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் நேரொத்ததான தலைப்பெதுவுமில்லாததும், அந்தத் தீர்மானத்துக்கான முதலாம் அட் டவ ணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின்கீழ்த் தோன் றுகின்றதுமான ஏதேனும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு அந்தத் தீர்மானத் தினால் குறித்தொதுக்கப்பட்ட பணங்களிலிருந்து அந்தக் காலப்பகுதி

யின் போது செலவிடப்பட்டிருந்த எவையேனும் பணத்தொகைகள், எல்லா நோக்கங்களுக்காகவும், இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில், பலவினச் சேவைகள், தலைப்பு 489 இன் கீழ்த் தோன்றுகின்ற 1 ஆம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்ச் செலவிடப்பட்டிருந்தனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு நேர்முன்னரான நாளன்று செலவிடப்பட்டிராதவையும் அவ்வாறு குறித்தொதுக்கப்பட்டவையுமான எவையேனும் பணங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும், இச்சட்டத்தின் கீழ் நேரொத்ததான தலைப்பின் கீழ்த் தோன்றுகின்ற நேரொத்த நிகழ்ச்சித்திட்டத்துக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணங்களில் உள்ளடக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அத்தீர்மானத்துக்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட முயற்சிகள் தொடர்பில், 1989, சனவரி 01 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது திரட்டுநிதியத்திலிருந்து முற்பணங்கள் என்ற வகையாகச் செலுத்தப்பட்ட எவையேனும் பணத்தொகைகள், எல்லா நோக்கங்களுக்காகவும், அத்தீர்மானத்தின் அதிகாரத்தின் கீழ் அவ்வாறு முற்பணமாக அளிக்கப்பட்டிருக்கவில்லையென்றும் ஆனால் இச்சட்டத்தின் அதிகாரத்தின்கீழ் அவ்வாறு முற்பணமாக அளிக்கப்பட்டிருந்தனவென்றும் கருதப்படுதல் வேண்டும்.

10. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைமூலங்களுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தருப்பத்தில், சிங்கள உரைமூலம் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1989 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சனசக்திச் சட்டம்

*(1989, மே மாதம் 10ந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**மனித வளங்களின் பயன்பாட்டை அதி உச்சவளவாக்குதலையும் சமூக உறுதிப்பாட்டை மேம்படுத்துதலையும் வறுமையை ஒழித்தலையும் நோக்காக கொண்டு சனசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ், நிவாரணம் வழங்குவதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கு மான ஒரு சட்டம்.**

1. இச்சட்டம் 1989 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சனசக்திச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, சனசக்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் திறைசேரியில் தாபிக்கப்பட்ட நிதியத்திற்கு, பணமாகவோ அல்லது வேறு வகையாகவோ செய்யப்படும் நன்கொடையொன்று, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்புடைமையின் நோக்கங்களுக்காக, அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட நிதியமொன்றுக்குப் பணமாகவோ அல்லது வேறு வகையாகவோ செய்யப்படும் நன்கொடையொன்றென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

3. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பெயர் குறித்தோ, பதவி குறித்தோ, ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படலாம்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பிரதி ஆணையாளர்களும், உதவி ஆணையாளர்களும், பெயர் குறித்தோ, பதவி குறித்தோ நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) அரசாங்க அதிபர் ஒவ்வொருவரும், அவரது நியமனம் எந்த நிருவாக மாவட்டம் தொடர்பிலானதோ அந்த நிருவாக மாவட்டம் தொடர்பில், இச்சட்டத்தினால் ஒரு பிரதி ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கலாம், புரியலாம், அத்துடன் நிறைவேற்றலாம். உதவி அரசாங்க அதிபர் ஒவ்வொருவரும் அவரது நியமனம் எந்த நிருவாகப் பிரிவு தொடர்பிலானதோ அந்த நிருவாகப் பிரிவு தொடர்பில் இச்சட்டத்தினால் ஓர் உதவி ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கலாம், புரியலாம், அத்துடன் நிறைவேற்றலாம்.

(4) மூன்றும் உட்பிரிவுக்கமைய, பிரதி ஆணையாளர் அல்லது உதவி ஆணையாளர் எவரும் இலங்கை முழுவதற்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கு நியமிக்கப்படலாம்.

(5) இச்சட்டத்தை நிருவகிப்பதில் மேற்சொல்லப்பட்ட அலுவலர்களுக்கு, உதவுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எழுதுவினைஞர் சார் மற்றும் சிற்றூழிய பணியாட்டொகுதியினரும் நியமிக்கப்படலாம்.

4. (1) ஒவ்வொரு பிரதி ஆணையாளரும், உதவி ஆணையாளரும் தமது தத்துவங்களைப் பிரயோகிப்பதில், தமது கடமைகளைப் புரிதலில் அல்லது தமது பணிகளை நிறைவேற்றுதலில் ஆணையாளரின் பொதுவான பணிப்புக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

(2) பிரதி ஆணையாளர் அல்லது உதவி ஆணையாளர் ஒவ்வொருவரும், ஆணையாளரின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, தமது நியமன இடப்பரப்பினுள், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள, அவர்மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

5. இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க காசாகவோ வேறு வகையாகவோ நிதியத்திலிருந்து எவரேனும் ஆளினால் பெறப்படும் நிவாரணம் எதுவும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் வருமான வரியிலிருந்து அல்லது வேறேதேனும் வரியிலிருந்து விலக்களிக்கப்படுவதாதல் வேண்டும்.

6. இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க, நிதியத்திலிருந்து நிவாரணம் பெற விண்ணப்பித்திருக்கும் அல்லது நிவாரணம் பெறும் ஆள் ஒவ்வொருவரும், இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தில் ''இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆள்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

7. இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆள் ஒவ்வொருவரையும், அவரினதும் அவரது வாழ்க்கைத் துணையினதும், பிள்ளைகளினதும் வேறு தங்கி வாழுநர்களினதும் சொத்துக்களும் பொறுப்புக்களும், அத்துடன் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின் கீழ், நிவாரணம் வழங்கப்பெறுவதற்கு அவர் தகவுடையவரா என நிச்சயிக்கும் நோக்கத்திற்குத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தகவலும் பற்றிய வெளிப்படுத்துகையொன்றை விதித்துரைக்கப் படக்கூடியவாறான, அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் செய்யுமாறு தேவைப்படுத்தல் ஆணையாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

8. ஆணையாளர், எழுத்திலான அறிவித்தல் மூலம், அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள்ளாக 7 ஆம் பிரிவின் கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையில் அடங்கியுள்ள ஏதேனும் கூற்றின் செம்மையை நிச்சயப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய தகவலை அவருக்குக் கொடுத்துதவுமாறு எவரேனும் ஆளைத் தேவைப் படுத்தலாம் என்பதுடன் அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவது அத்தகைய ஆளின் கடமையாதலும் வேண்டும்.

9. ஆணையாளரானவர், இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளெவரினாலும், 7 ஆம் பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையில் அடங்கியுள்ள கூற்று எதுவும், முழுமையாக அல்லது பகுதியளவில் பொய்யானது அல்லது பிழையானது எனவும், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின் கீழ் நிவாரணம் வழங்கப்பெறுவதற்கு அத்தகைய ஆள் உரித்துடையராகார் எனவும் திருப்திப்படுமிடத்து, ஆணையாளர், 15 (1) ஆம் பிரிவின் ஏற்பாடு

களுக்குப் பங்கமின்றி அத்தகைய ஆளுக்கு நிவாரணம் வழங்கப்படுவதை உடனடியாகத் தொடராது நிறுத்துதல் வேண்டும், அத்துடன் எழுத்திலான அறிவித்தல் ஒன்றின் மூலம் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க, அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் நிவாரணத்தின் பெறுமதியை, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்குள்ளாகச் செலுத்தும்படி தேவைப்படுத்துதலும் வேண்டும்.

*10.* எந்த ஆள் 7 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்றைச் செய்தும், அத்துடன் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் நிவாரணத்தைப் பெற்றுக்கொண்டும் உள்ளாரோ அந்த ஆள் ஒவ்வொருவரும், அவரது சொத்துக்கள், பொறுப்புக்கள் அல்லது அவரது வாழ்க்கைத் துணையின், பிள்ளைகளின், அல்லது வேறு தங்கிவாழுநரின் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பான அத்தகைய வெளிப்படுத்துகையில் அவரால் கொடுத்துதவப்பட்ட விவரணங்களிலான ஏதேனும் முக்கியமான மாற்றம்பற்றி, அத்தகைய மாற்றம் ஏற்பட்டதிலிருந்து இரண்டுமாத காலப் பகுதிக்குள்ளாக ஆணையாளருக்கு அறிவித்தல் அவரது கடமையாதல் வேண்டும்.

*11.* *(1)* ஆணையாளரானவர், இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆள் ஒருவருக்கு வழங்கப்படும் நிவாரணத்தைத் தொடராது நிறுத்த முடிவு செய்யுமிடத்து, அவரது முடிவை, அத்தகைய ஆளுக்கு அவர் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

*(2)* ஒன்பதாம் பிரிவின் கீழ் ஆணையாளரால் எடுக்கப்படும் முடிவு ஒவ்வொன்றும் 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இறுதியானதாதல் வேண்டும்.

*12.* *(1)* இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பத்து ஆட்களுக்குக் குறையாதவர்களைக் கொண்ட மேன்முறையீடுகள் சபையொன்று ஒவ்வோர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கெனவும் தாபிக்கப்படுதல் வேண்டும். இவர்களுள் ஒருவர் மேன்முறையீடுகள் சபையின் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

*(2)* ஓராமுட்பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீட்டுச் சபைக்கும் செயலாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

*(3)* ஓராமுட்பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீட்டுச் சபைக்கான செயலாளரும் அத்தகைய மேன்முறையீடுகள் சபைக் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும். அதன் கூட்டம் எதற்குமான கூட்ட நடப்பெண் மூன்று ஆதல் வேண்டும்.

*(4)* ஓராமுட்பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீட்டுச் சபையிலும் தவிசாளர் மேன்முறையீடுகள் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகை தராதவிடத்து, அத்தகைய கூட்டத்திற்குச் சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் அவர்களிடையேயிருந்து கூட்டத்திற்குத் தவிசாளர் ஒருவரைத் தெரிந்தெடுத்தல் வேண்டும்.

(5) ஓராமுட்பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட மேன்முறையீடுகள் சபைக் கூட்டமொன்றில் விசாரிக்கப்பட்ட ஒரு மேன்முறையீடு பற்றி, அக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவு, அத்தகைய மேன்முறையீட்டின்மீது மேன்முறையீடுகள் சபையின் முடிவாகுமெனக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக, (1) ஆம் உட்பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட மேன்முறையீடுகள் சபை, அதன் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையைத் தீர்மானித்தல் வேண்டும்.

13. (1) எந்த ஆள், 9 ஆம் பிரிவின் கீழான ஆணையாளரின் முடிவினால் இன்னலுறுகின்றாரோ அந்த ஆளெவரும், அத்தகைய முடிவுபற்றி அவருக்கு அறிவிக்கப்பட்ட இருபத்தெட்டு நாட்களுக்குள்ளாக அத்தகைய முடிவுக்கு எதிராக அத்தகைய ஆள் வதிகின்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கெனத் தாபிக்கப்பட்ட மேன்முறையீடுகள் சபைக்கு மேன்முறையீடொன்றை முன்வைக்கலாம்.

(2) மேன்முறையீடு ஒவ்வொன்றும் மேன்முறையீடுகள் சபைக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான மனுவொன்றின்மூலம் முன்வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மேன்முறையீட்டுக்கான ஏதுக்களையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

(3) மேன்முறையீடுகள் சபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் முன் வைக்கப்படும் ஏதேனும் மேன்முறையீட்டைக் கையாளுகையில், ஆணையாளரின், எந்த முடிவுக்கு எதிராக மேன்முறையீடு முன்வைக்கப்பட்டதோ அந்த முடிவை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது தள்ளிவைக்கலாம்.

(4) ஓராமுட்பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றன் மீது மேன்முறையீடுகள் சபையின் முடிவானது அத்தகைய முடிபு செய்யப்பட்டதிலிருந்து 27 நாட்களுக்குள் ஆணையாளருக்கும் மேன்முறையிட்டாளருக்கும் தெரியப்படுத்தப்படுதல் வேண்டும்.

14. (1) இச்சட்டத்தின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் நிவாரணத்தின்கீழ்ப் பெறுமதித் தொகையைச் செலுத்தும்படி 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலொன்றின்மூலம் தேவைப்படுத்தப்படும் எவரேனுமாள், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அத்தகைய தொகையைச் செலுத்தத் தவறுமிடத்து, அல்லது அத்தகைய தொகையைச் செலுத்தும்படி தேவைப்படுத்துகின்ற முடிவுக்கு எதிராக மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்டு அத்தகைய மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்ட முப்பது நாட்களுக்குள் அத்தகைய தொகையைச் செலுத்தத் தவறுமிடத்து, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொகையானது தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், எந்த ஆளினால் அத்தகைய தொகை கொடுபடற்பாலதோ அந்த ஆள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணை தவறியவர் ஒருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) (அ) ஏதேனும் தொகை தவணை தவறியதாக இருக்குமிடத்து, ஆணையாளரானவர், தவணை தவறியவர் எந்தப் பிரிவில் வதிகின்றாரோ அந்தப் பிரிவு எதிலும் அல்லது எந்தப் பிரிவில் தவணை தவறியவருக்குச் சொந்தமாகவுள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனம் அமைந்திருக்கிறதோ அந்தப் பிரிவில்

நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றம் ஒன்றுக்கு, தவணை தவறியுள்ள தொகை பற்றிய விபரங்களையும் எந்தத் தவணை தவறுநரினால், அத்தொகை கொடுக்கற்படாலதோ அந்தத் தவணை தவறுநரின் பெயரையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை வழங்கலாம்.

(ஆ) இச்சட்டத்தின் கீழ் தவணை தவறியவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் நிவாரணத்தின் பெறுமதி பற்றி (அ) என்னும் பந்தியின்கீழ் ஆணையாளரால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மை ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

(இ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் சான்றிதழொன்று கிடைக்கப்பெற்றதன்மீது நீதிவான், சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட தொகையை அறவிடுவதற்காக ஏன் தவணை தவறியவருக்கெதிராக மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதலாகாது என்பதற்குக் காரணங் காட்டுவதற்கு தவணை தவறியவரைத் தம் முன்னிலையில் கட்டளை விட்டழைத்தல் வேண்டும் என்பதுடன், போதிய காரணம் காட்டத் தவறுமிடத்து, அந்தத் தொகை, குற்றப் பணத்தால் மாத்திரம் தண்டிக்கப்படற்பாலதும், மறியற்றண்டனையால் தண்டிக்கப்படற்பாலதல்லாததுமான தவறுென்றுக்கு அத்தகைய தவணை தவறியவரின்மீது நீதிவானின் தண்டனைத் தீர்ப்பொன்றினால் விதிக்கப்பட்ட குற்றப் பணமொன்ருகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன்மேல், அத்தகைய தவறுென்றுக்கு விதிக்கப்பட்ட குற்றப்பணத்தில் கொடுப்பனவு தவணை தவறியமை தொடர்பில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் (அப்பிரிவின் (இ) (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அத்துடன் (1) என்னும் பந்திகளைத் தவிர) ஏற்புடையனவாதல் வேண்டும். அத்துடன் நீதிவான், அத்தகைய தண்டனைத் தீர்ப்பை விதிக்கும் நேரத்தில் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் மூலம் அவரால் விடுத்திருக்கப்படக்கூடிய ஏதேனும் பணிப்பை விடுக்கலாம்.

(3) இப்பிரிவின் கீழ் ஆணையாளர் சான்றிதழொன்றை வழங்கும்பொழுதில் எல்லாம், உடனடியாக அதனைப் பற்றிய அறிவிப்பொன்றைத் தவணை தவறியவருக்கு நேரில் சேர்ப்பித்தல் மூலமோ அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் அஞ்சலிலோ அல்லது தந்திமூலமோ வழங்குதல் வேண்டும். ஆனால் அத்தகைய அறிவிப்பு தவணை தவறியவருக்குக் கிடைக்கப்பெறாமை இப்பிரிவின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றதாக்குதல் ஆகாது.

15. (1) ஏழாம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை எதனிலும் அவரது அல்லது அவரது வாழ்க்கைத் துணையின், பிள்ளைகளின் அல்லது தங்கி வாழுநர்களின் சொத்துக்கள், பொறுப்புகள் தொடர்பில் அவரது அறிவுக் கெட்டியவரை பொய்யான அல்லது பிழையான கூற்றொன்றைச் செய்கின்ற ஆளெவரும், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஓர் ஆண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஏழாம் பிரிவின்கீழ், வெளிப்படுத்துகை ஒன்றைச் செய்துள்ளவராகவும் இச்சட்டத்தின்கீழ் நிவாரணம் பெறுபவராகவும் இருந்து, நியாயமான காரண மின்றி—

(அ) அவரது சொத்துக்கள், பொறுப்புகள்; அல்லது

(ஆ) அவரது வாழ்க்கைத் துணையின், பிள்ளைகளின் அல்லது தங்கி வாழு நர்களின் சொத்துக்கள், பொறுப்புகள்

தொடர்பிலான அத்தகைய வெளிப்படுத்துகையில் அவரால் கொடுத்துதவப்பட்ட விவரங்களிலான ஏதேனும் முக்கிய மாற்றம் பற்றிய அத்தகைய மாற்றத்தின் தேதியிலிருந்து இரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப் பகுதிக்குள் ஆணை யாளருக்கு அறிவிக்காது விடுகின்றவருமான ஆளெவரும், இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப் படுவதன்மேல் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) எவரேனும் ஆள்—

(அ) அவருக்கு 8 ஆம் பிரிவின் கீழ் அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கு, இணங்கியொழுகத் தவறினால்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஏதேனும் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி யொழுகுவதில் தெரிந்துகொண்டே ஏதேனும் பொய்யான அல்லது பிழையான தகவலைக் கொடுத்துதவினால்,

அத்தகைய ஆள் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக் கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதல் வேண்டும்.

(4) எவரேனும் ஆள்—

(அ) இச்சட்டத்தின் கீழ் எவரேனும் அலுவலர் அவரது பணிகளை நிறை வேற்றுகையில் அவரைத் தடைசெய்வாராயின் அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுவாராயின் அல்லது அவருடன் தலையிடுவாராயின் அல்லது தலையிட எத்தனிப்பாராயின். அல்லது செல்வாக்கைப் பயன் படுத்துவாராயின், அல்லது

(ஆ) இச்சட்டத்தின் கீழ்ப் பொய்யான வெளிப்படுத்துகையைச் செய்யு மாறு எவரேனும் ஆளைத் தூண்டுவாராயின் அல்லது தூண்ட எத் தனிப்பாராயின்

அத்தகைய ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓராயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

16. (1) அமைச்சரானவர், பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:—

(அ) விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்களும்;

(ஆ) எவரேனும் தனியாளுக்கு அல்லது குடும்பத்துக்குச் சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்குவதற்கான தகவுகள் பற்றிய நிபந்தனைகள்;

(இ) அத்தகைய நிவாரணத்திற்கான விண்ணப்பங்கள் என்ன முறையில் ஆணையாளருக்குச் செய்யப்பட வேண்டுமோ அம்முறையும் அத்துடன் அத்தகைய விண்ணப்பங்கள் எந்த அலுவலருக்குச் செய்யப்பட வேண்டுமோ அந்த அலுவலர்களும்;

(ஈ) எந்த ஆட்கள் அத்தகைய நிவாரணம் வழங்கப்பெறுவதற்கு விண்ணப்பிக்கின்றனரோ அந்த ஆட்களினால் இணங்கியொழுகப்பட வேண்டிய நிபந்தனைகளும் அத்துடன் எந்நோக்கங்களுக்காக அத்தகைய நிவாரணத்திற்கு விண்ணப்பிக்கப்படலாமோ அந்நோக்கங்களும்;

(உ) சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான நிவாரணத்திற்குத் தகவுடைய ஆட்களுக்கு எப்படிவத்திலும், எம்முறையிலும் நிவாரணம் வழங்கப்பட வேண்டுமோ அப்படிவமும், முறையும்;

(ஊ) எந்நிபந்தனைகளுக்கு அமைவாக அத்தகைய நிவாரணம் வழங்கப்பட வேண்டுமோ அந்நிபந்தனைகள் (விதித்துரைக்கப்பட்ட வங்கித் தொழில் நிறுவனத்தில் அத்தகைய நிவாரணத்தை முழுமையாக அல்லது பகுதியளவில் வைப்பிலிடுதல், அத்தகைய வைப்புக்கள் எக்காலப் பகுதிக்குள்ளும் எந்நோக்கங்களுக்காகவும் மீளப் பெறப்படலாமோ அக்காலப் பகுதிகளும், நோக்கங்களும் பற்றிய நிபந்தனைகள் உள்ளடங்கலாக);

(எ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட அல்லது செய்யப்படத் தேவைப்படுத்தப்பட்ட எல்லா அறிவித்தல்களினதும் வெளிபடுத்துதல்களினதும் படிவம்;

(ஏ) அத்தகைய நிவாரணம் வழங்கப்பெறுவதற்காகத் தற்காலிகமாக அடையாளங் காணப்பட்ட ஆட்கள் பற்றிய நிரல்களை, காலத்திற்குக் காலம் வெளியிடுதல்;

(ஐ) அத்தகைய ஏதேனும் நிரலில் எவரேனும் ஆளின் பெயரைச் சேர்ப்பதற்கு ஆட்சேபனை செய்வதற்கான ஏற்பாடு;

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## 1989 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, வரி மன்னிப்புச் சட்டம்

*[1989, மே மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**வருமான வரி விதித்தல் பற்றிய சட்டத்தின் கீழ் ஆள் ஒருவர் சேர்த்து வைத்த எந்த இலாப வருமானங்கள் தொடர்பில் வருமானத் திரட்டைக் கொடுத்துதவாது விட்டிருக்கின்றாரோ, அல்லது மேற்படி சட்டத்தின் கீழ் அவ்வாளினால் கொடுத்து உதவப் பட்ட ஒரு திரட்டில் எந்தச் சேர்த்துவைத்த இலாப வருமானங்களை வெளிவிடாமல் விட்டாரோ அந்தச் சேர்தது வைதத இலாப வருமானங்களைப் பிரதிபலிக்கும் பணங் களைத் தேசிய சேமிப்பு வங்கியில் சிறப்புக் கணக்கில் வைப்பிடுவதை இயலக்கூடிய தாகச் செய்வதற்கும் அத்தகைய சிறப்புக் கணக்குகளில் வைப்பிடப்பட்ட பணங்களின் மீது வரி விதிப்பதற்கும், அறவிடுவதற்கும்; அத்தகைய சிறப்புக் கணக்குகளில் வைப் பிடப்பட்ட பணங்களைக் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக கைமீட்பதை இயலக்கூடியதா கச் செய்வதற்கும்; அத்தகைய சிறப்புக் கணக்குகளில் பணங்களை வைப்பிடும் ஆட் களுக்கு அத்தகைய பணங்களைப் பிரதிபலிக்கின்ற இலாப வருமானங்கள் தொடர் பிலான குறித்த சில வரிகளைச் செலுத்துவதற்கான பொறுப்பிலிருந்து காப்பளிப்ப தற்கும். அத்தகைய இலாப வருமானங்கள் தொடர்பிலான தவறுகளுக்காக அவர் களுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படாதவாறு அவ்வாட்களுக்குச் காப்பளிப்ப தற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

*1.* இச்சட்டம் 1989 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, வரி மன்னிப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதோடு 1989 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*2.* (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, வரி விதித்தல் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ் 1988 மார்ச் மாதம் 31 ஆம் தேதியன்றோ அல்லது அதன் முன்னரோ தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டு ஆண்டுக்காக 1988 மார்ச் மாதம் 31 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னரோ எழுகின்ற அல்லது வருமதியாகத் திரளுகின்ற எவையேனும் இலாப வருமானங்கள் தொடர்பில் அத்தகைய வரியைச் செலுத்துவதற்கு ஆளாக இருந்தவரும், அத்துடன் அத்தகைய ஏதேனும் வரி மதிப்பீட்டு ஆண்டுக்காக, அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வருமான வரித் திரட்டொன்றைக் கொடுத்துதவாதவரும், அல்லது அத்தகைய ஏதேனும் வரி மதிப்பீட்டு ஆண்டுக் காக அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவராற் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் திரட்டில் அத்தகைய இலாபங்களை அல்லது வருமானத்தை வெளி விடத் தவறியுள்ளவருமான ஆள் எவருக்கும் இச்சட்டம் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள், வருமான வரி அல்லது வருமான வரி மீதான மிகைவரி, அல்லது 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் மொத்த விற்பனை வரவுவரி அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழ் மொத்த விற்பனை வரவுவரி விதித்தல் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1988 மார்ச் மாதம் 31 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னரோ எழுகின்ற அல்லது வருமதி யாகத் திரளுகின்ற எவையேனும் இலாபங்கள் அல்லது வருமானம் அல்லது மொத்த விற்பனை வரவு இலாப வருமானங்கள் தொடர்பிற் செலுத்தப்பட

வேண்டிய ஏதேனும் வரியைச் செலுத்தாமற் தட்டிக் கழித்தார் என்ற சார்த்துரையின் பேரில் அல்லது சந்தேகத்தின்பேரில் எவ்வாள் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியால் அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் வேறெவரேனும் அலுவலரால் நுண்ணாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவோ அவ்வாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகின்ற ஆளாக இல்லாதவரும், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவருமான ஒவ்வோர் ஆளும், இந்தச் சட்டத்தில் இனிமேல் ''இச்சட்டம் ஏற்புடையதாகின்ற ஆள்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

3. இச்சட்டம் ஏற்புடையதாகின்ற எவரேனும் ஆள் திரண்ட சேர்த்து வைத்த இலாபங்களை அல்லது வருமானத்தைப் பிரதிபலிக்கும் பணமாக அமைகின்றதும், அத்துடன் வருமான வரி விதித்தல் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ், எத்தொகை தொடர்பில் வருமானத் திரட்டுக் கொடுத்துதவ அத்தகைய ஆள் தவறியுள்ளாரோ அத்தொகை அமைகின்றதும் அல்லது அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் வருமானத் திரட்டில் எத்தொகையை அத்தகைய ஆள் வெளிவிடத் தவறியுள்ளாரோ அத்தொகையாக அமைகின்றதுமான பணங்களை வைத்திருக்கின்றவிடத்து, அப்போது அத்தகைய ஆள் அப்பணங்களை 1989 யூன் மாதம் 30 ஆம் தேதி அன்றோ அதற்கு முன்னரோ வங்கியில் அந்த நோக்கத்துக்கென அவரால் திறக்கப்படக்கூடிய அத்தகைய சிறப்புக் கணக்கில் அவரது வரவில் வைப்பிலிடப்படலாம்.

4. (1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் வங்கியில் ஒரு சிறப்புக் கணக்கில் பணங்களை வைப்பிலிடும் ஒவ்வோராளும்—

(அ) இந்தச் சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் அமைந்த வெளிப்படுத்துகை ஒன்றை வங்கிக்குச் செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவ்வாறு வைப்பிலிடப்பட்ட பணங்களின் 20 சதவீதத்துக்குச் சமமான தொகையுடைய ஒரு வரியை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்த ஆளாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் எவரேனும் ஆளினால் செலுத்தப்படற்பாலதான வரியானது, எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்கில் அத்தகைய ஆளின் வரவில் இருக்கும் பணத்திலிருந்து 1989 யூலை மாதம் 31 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னரோ வங்கியினால் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) மூன்றாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்கில் எவரேனும் ஆளின் வரவில் இருக்கின்ற பணங்களிலிருந்து (2) ஆம் உட்பிரிவின் கீழான வரியை ஆணையாளர் தலைமையதிபதிக்கு வங்கி செலுத்துவது அத்தகைய ஆளால் அதிகாரமளிக்கப்பட்ட செலுத்துகையாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரி அவ்வாளால் ஆணையாளர் தலைமை அதிபதிக்குச் செலுத்தப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

5. வேறேதேனும் சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்கில் எவையேனும் பணங்களை வைப்பிலிட்டுள்ள ஆள் 1991 யூலை 1 ஆம் தேதிக்கு முன்னர் 4 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வரி செலுத்தப்பட்டதன் பின்னர் அத்தகைய சிறப்புக் கணக்கில் அத்தகைய ஆளின் வரவில் இருக்கும் மீதிப் பணத்தொகை முழுவதையுமோ அல்லது அதன் பாகம் எதையுமோ (அத்தகைய மீதித் தொகை மீது வருமதியாகத் திரளும் வட்டி தவிர) 6 ஆம் பிரிவிற் குறிப் பிடப்பட்ட நோக்கங்களுக்காகவன்றிக் கைமீட்பதை வங்கி அனுமதித்தலாகாது.

6. (1) மூன்றாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான அத்தகைய ஏதே னும் சிறப்புக் கணக்கில் எவையேனும் பணங்களை வைப்பிலிட்டுள்ள எவரேனும் ஆள், 4 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வரி செலுத்தப்பட்டதன் பின்னர், அத்தகைய சிறப்புக் கணக்கில் அவரது வரவில் இருக்கும் மீதித் தொகையை 1991 யூன் 30 ஆம் தேதிக்குப் பின்னர் கைமீட்கலாம்;

ஆயின், எப்படியிருப்பினும், அத்தகைய ஆள் 1989 யூலை 31 ஆம் தேதிக்குப் பின்னர் அத்தகைய மீதித் தொகை முழுவதையும் அல்லது அதன் பாகம் எதனையும் பின்வரும் நோக்கங்களுக்காகக் கைமீட்கலாம்:—

(அ) சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப் பாக இருக்கும் அமைச்சரினால் அங்கீகாரமளிக்கப்பட்டதும் பத்து ஆட் களுக்குக் குறையாதோருக்கு ஊழியம் வழங்குவதுமான கமத்தொழில் அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சி ஒன்றில் முதலீடு செய்வதற்கு அல்லது

(ஆ) 1989 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சனசக்தி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனசக்தி நிதியத்துக்கு நன்கொடையொன்று செய்யும் நோக்கத்துக்காக,

(2) மூன்றாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சிறப்புக் கணக்கில் அவரது வரவில் இருக்கும் எவையேனும் பணங்களை 6 ஆம் பிரிவுக்கான காப்பு வாசகத் தில் குறிப்பிடப்பட்ட எவையேனும் நோக்கங்களுக்காக 1989 யூலை 31 ஆம் தேதிக்குப் பின்னர் கைமீட்கின்ற எவரேனும் ஆள் அத்தகைய பணங்கள் எந்த நோக்கத்துக்காகக் கைமீட்கப்பட்டனவோ அந்த நோக்கத்துக்காக அவற்றைப் பயன்படுத்தத் தவறுகின்றவிடத்து, அத்தகைய ஆள் இச்சட்டத்தின் கீழ்த் தவ றொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதோடு, நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு தொகையைக் குற்றப்பண மாகச் செலுத்த ஆளாதலும் வேண்டும்.

(3) வேறேதேனும் சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய சிறப்புக் கணக்கில் அவரது வரவில் இருக்கும் பணங்களை 1989 யூலை 31 ஆம் தேதிக்குப் பின்னர் கைமீட்டு அப்பணங்களை 6 ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் நோக் கங்களுக்குப் பயன்படுத்தும் எவரேனும் ஆளின் 1989 ஏப்பிரல் மாதம் 1 ஆம் தேதியன்றோ அதன் பின்னரோ தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக் கான வரியிடக்கூடிய வருமானத்தைக் கணிக்கையில், அந்த வரி மதிப்பீட்டாண்டுக் கான அத்தகைய ஆளின் பணங்கள் தொடர்பில் கழிப்பு எதுவும் அனுமதிக்கப்பட மாட்டாது.

7. நான்காம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வரி செலுத்தப்பட்ட தன் பின்னர் 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்கில் எவரேனும் ஆளின் வரவில் இருக்கும் மீதித் தொகை மீது, சேமிப்புக் கணக்குகளின் வரவில் இருக்கும் பணங்கள் வங்கியினாற் செலுத்தப்பட வேண்டிய நடப்பு வட்டி வீதத்திலான வட்டி வங்கியினால் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு வருமதியாகத் திரளும் வட்டி, 1989, யூலை மாதம் 31 ஆம் தேதிக்குப் பின்னர் அவ்வாளால் கைமீட்கப்படலாம்.

8. இச்சட்டம் ஏற்புடையதாகின்றவரும் 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்கில் பணங்களை வைப்பிலிட்டுள்ளவரும், அந்தப் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வரியைக் கொடுத்துள்ளாரென 4 ஆம் பிரிவின் கீழ் கருதப்படுபவருமான எவரேனும் ஆள், பின்வருவனவற்றுக்கு ஆளாகமாட்டார்; அதாவது—

(அ) (1) 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ முடிவடையும் ஏதேனும் வரி மதிப்பீட்டு ஆண்டுக்கான, அத்துடன் 2 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள திரட்டு இலாபங்களின் அல்லது வருமானத்தின் தொகையினால் பிரதிபலிக்கப்படும் அவரது இலாபங்கள் அல்லது வருமானம் தொடர்பில் வருமான வரி விதிப்பதற்கு அப்போதைக்கு ஏற்புடைத்தான சட்டத்தின்கீழ் ஏதேனும் வருமான வரி அல்லது வருமான வரி மீதான மிகை வரி செலுத்துவதற்கு;

(ii) 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ முடிவடையும் ஏதேனும் வரி மதிப்பீட்டு ஆண்டுக்கான அவரது எத்தேறிய செல்வத்தைக் கொள்ளலில் 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள திரட்டு இலாபங்கள் அல்லது வருமானம் பயன்படுத்தப்பட்டனவோ, அத்தேறிய செல்வம் தொடர்பில் செல்வவரி விதிப்பதற்கு அல்லது செல்வவரிமீது மிகைவரி விதிப்பதற்கு அப்போதைக்கு ஏற்புடைத்தான சட்டத்தின்கீழ் ஏதேனும் செல்வவரி மீதான மிகைவரி செலுத்துவதற்கு; அல்லது

(iii) எம்மொத்த விற்பனவிலிருந்து 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள திரட்டு இலாபம் அல்லது வருமானத் தொகை எழுந்ததோ அல்லது பெறப்பட்டதோ, அம்மொத்த விற்பனவு தொடர்பில், 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழான ஏதேனும் தொழில் மொத்த விற்பனவு வரி அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனவு வரியின் கீழான ஏதேனும் மொத்த விற்பனவு வரி செலுத்துவதற்கு; அல்லது

(ஆ) (1) 1988 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் அல்லது அவ்வாண்டு சம்பந்தமாக, 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள திரட்டு இலாபங்களின் அல்லது வருமானத்தின் தொகையில் முழுவதும் அல்லது ஏதேனும் பாகம் அல்லது எச்

செல்வத்தைக் கொள்ளலில் 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள திரட்டு இலாபங்களின் அல்லது வருமானத்தின் தொகையில் முழுவதும் அல்லது ஏதேனும் பாகம் அல்லது எச்செல்வத்தைக் கொள்ளலில் 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள திரட்டு இலாபங்களின் அல்லது வருமானத்தின் தொகையில் முழுவதும் அல்லது ஏதேனும் பாகம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றதோ, அச்செல்வம், இலாபம் அல்லது வருமானம் தொடர்பில் வருமானவரி விதிப்பதற்கு அல்லது வருமானவரிமீது மிகைவரி விதிப்பதற்கு அல்லது செல்வவரி விதிப்பதற்கு அல்லது செல்வவரி மீது மிகைவரி விதிப்பதற்கு அப்போதைக்கு ஏற்புடைத்தான சட்டத்தின் கீழான தவறெதற்கும் அவருக்கு எதிராகக் குற்ற வழக்குத் தொடுக்கப்படுவதற்கு அல்லது அவர் தண்டம் செலுத்துவதற்கு; அல்லது

(ii) 1988 ஆம் ஆண்டு ஏப்பிரல் 1 ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் எம்மொத்த விற்பனையில் இருந்து 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள திரட்டு இலாபங்களில் அல்லது வருமானத்தின் தொகை எழுந்ததோ அல்லது பெறப்பட்டதோ, அம்மொத்த விற்பனவு தொடர்பில், 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனவு வரிச் சட்டத்தின் கீழான அல்லது 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழான தவறெதற்கும் அவருக்கெதிராகக் குற்ற வழக்குத் தொடுக்கப்படுவதற்கு அல்லது அவர் தண்டம் செலுத்துவதற்கு.

9. இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள எதுவும், வருமான வரி விதிப்பது அல்லது வருமானவரி மீது மிகைவரி விதிப்பது அல்லது செல்வவரி விதிப்பது அல்லது செல்வவரி மீது மிகைவரி விதிப்பது தொடர்பில் அப்போதைக்கு ஏற்புடைத்தான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட வரி மதிப்பீடு எதனையும் அல்லது மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் இறுதியானதும் முற்றானதுமான வேறு ஏதேனும் கருமத்தினையும் மீளாய்வு செய்வதற்கு அதிகாரமளிக்கின்றதாக வாசிக்கப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

10. (1) வங்கியின் அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும், அத்துடன் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும், இச்சட்டத்தை நடைமுறைக்கிடும்போது அவரது அறிவுக்கு எட்டிய எல்லா விடயங்கள் சம்பந்தமாகவும் இரகசியத்தைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், இரகசியத்தைப் பேணுவதற்கு உதவுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் நோக்கத்துக்கென, வங்கியின் அலுவலர் அல்லது ஊழியர் ஒருவர், 3 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளனவும் அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்குப் பற்றியனவுமான பின்வரும் விபரங்களை, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு, அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது நீதிமன்றமொன்றிற்குத் தெரிவிக்கலாம்; அதாவது—

(அ) கணக்கு வைத்திருப்பவரின் பெயரும், வருமானவரிக் கோப்பு இலக்கமும்;

(ஆ) தொழிலின் பெயர் எதுவுமிருப்பின் அப்பெயரும், வருமானவரிக்கோப்பு இலக்கமும்;

(இ) வைப்புத் தேதி அல்லது கைமீட்புத் தேதி;

(ஈ) வைப்பிலிட்ட தொகை அல்லது கைமீட்ட தொகை;

(உ) அத்தகைய சிறப்புக் கணக்குத் தொடர்பில் 4 (1) (அ) என்னும் பிரிவின் கீழ்க் கூறப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவையான அத்தகைய வேறு விபரங்கள்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றும் வங்கியின் அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அலுவலர் அல்லது ஊழியர் எவரும், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

11. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமையேற்படும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

12. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

''ஆணையாளர் தலைமையதிபதி'', ''இலாபங்கள்'', ''வருமானம்'', ''செல்வம்'', ''வரிமதிப்பீட்டாண்டு'' என்னும் சொல்லமைப்புக்கள், முறையே, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள அதே பொருளையுடையனவாதல் வேண்டும்;

''வங்கி'' என்பது 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி எனப் பொருளாகும்;

''ஆள்'' என்பது ஒரு கம்பனியையும் ஓர் ஆட்கள் குழுவையும் ஒரு பங்குடைமையையும் உள்ளடக்கும்;

''வருமானவரி, மற்றும் வருமானவரியின்மீது மிகைவரி விதிப்பதற்கு அப்போதைக்கு ஏற்புடைத்தான சட்டம்'' என்பது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டமெனவும், 1982 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, வருமானவரியின் மீதான மிகைவரிச் சட்டமெனவும், 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வருமானவரியின் மீதான மிகைவரிச் சட்டமெனவும் பொருள்படும்;

''செல்வவரி அல்லது செல்வவரிமீது மிகைவரி விதிப்பதற்கு அப்போதைக்கு ஏற்புடைத்தான சட்டம்'' என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டமெனவும், 1982 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, செல்வவரிச் சட்டம் எனவும் பொருள்படும்.

## 1989 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம்

*[1989, மே மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1989 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 46 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(ஊ) அத்தகைய கொடுக்கல் வாங்கலுக்கு சார்த்திக் கூறப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியும் 50அ என்னும் பிரிவின்கீழ்க் கழிக்கப்பட்ட பிடித்துவைத்தல் மொத்த விற்பனை வரவு வரியும்.''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் XV ஆம் அத்தியாயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் XV அ என்னும் அத்தியாயமாகப் பயனுறுதலும் வேண்டும்:—

### அத்தியாயம் XV அ

**இறக்குமதியாளர்களினாலும், உற்பத்தியாளர்களினாலும் செய்யப்படும் விற்பனைகளின்மீது பிடித்துவைத்தல் மொத்த வீற்பனை வரவு வரியைக் கழித்தல்**

50அ. (1) இச்சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும்—

(அ) பன்னிரண்டாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவரான அத்தகைய எவரேனும் இறக்குமதியாளர்; அல்லது

(ஆ) எவரேனும் உற்பத்தியாளர்,

அத்தகைய உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் என்ற வகையில் தொழில் கொண்டு நடாத்தும் நெறியின்போது, 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் (விலக்கப்பட்டவொரு பொருள் தவிர்ந்த) ஏதேனும் பொருளை (இதனகத்துப் பின்னர் ''வாங்குநர்'' என அழைக்கப்படும்) எவரேனும் ஆளுக்கு விற்பனை செய்யுமிடத்து, அத்தகைய விற்பனைமீது பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான தொகையின் ஒரு சத வீதப்படி கணிக்கப்பட்டவொரு வரியை (அது இதனகத்துப் பின்னர் ''பிடித்துவைத்தல் மொத்த

விற்பனை வரவு வரி'' என அழைக்கப்படும்) அத்தகைய இறக்குமதியாளரின் அல்லது உற்பத்தியாளரின், 5 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட்ட, மொத்த விற்பனை வரவின் பாகமாக அத்தகைய தொகை அமையுமிடத்து, அவர் கழித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க பிடித்து வைத்தல் மொத்த விற்பனை வரவு வரியைக் கழிக்கின்ற ஒவ்வோர் இறக்குமதியாளரும் அல்லது உற்பத்தியாளரும்,—

(அ) பின்வருவனவற்றைத் தருவதான உறுதிச்சீட்டொன்றை அத்தகைய பொருளை வாங்குநருக்கு வழங்குதல் வேண்டும்:—

(i) அவருடைய பெயரும் அஞ்சல் முகவரியும்;

(ii) வாங்குநரின் பெயரும் அஞ்சல் முகவரியும்;

(iii) விற்பனைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகப் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான பணத்தொகை;

(iv) எந்தத் தேதியில் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டதோ அந்தத் தேதி;

(v) அத்தகைய விற்பனைக் கொடுக்கல் வாங்கலுக்குச் சார்த்திக் கூறப்படற்பாலதான பிடித்துவைத்தல் மொத்த விற்பனை வரவு வரி; அத்துடன்

(vi) நாற்பத்தாறு (2) ஆம் பிரிவின்கீழ் அவர் தரவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட வேறு எவையேனும் விபரங்கள்; அத்துடன்,

(ஆ) எந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பிடித்துவைத்தல் மொத்த விற்பனை வரவு வரி கழிக்கப்பட்டதோ அந்தக் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற காலாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான பிடித்துவைத்தல் மொத்த விற்பனை வரவு வரியாகக் கழிக்கப்பட்ட பணத்தொகையையும் ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(3) மொத்த விற்பனை வரவு வரி செலுத்துதற்காளாகும் எவரேனும் ஆளின் மொத்த விற்பனை வரவானது, எப்பொருள் தொடர்பில் இதனகத்து முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பிடித்துவைத்தல் மொத்த விற்பனை வரவுவரி கழிக்கப்பட்டிருக்கின்றதோ அப்பொருளின் விற்பனையின்மீது பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான பணத்தொகையொன்றை உள்ளடக்குகின்றவிடத்து, அவர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு வழங்கப்பட்டதும் அத்தகைய பிடித்துவைத்தல் மொத்த விற்பனை வரவு வரி தொடர்பிலானதுமான உறுதிச்சீட்டைக் காண்பித்தலின்மீது, அவரால் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரிக்கு எதிராக அத்தகைய உறுதிச்சீட்டில் தரப்பட்டுள்ள பிடித்து வைத்தல் மொத்த விற்பனை வரவு வரியை எதிரீடு செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய எதிரீடு எதுவும் பின்வருவன தொடர்பில் கழிக்கப்படும் பிடித்துவைத்தல் மொத்த விற்பனை வரவு வரியின் விடயத்தில் அனுமதிக்கப் படுதல் ஆகாது:—

(அ) ஏதேனும் தொழிலில் பயன்படுத்துவதற்காகக் கொள்வனவு செய்யப் படும் ஏதேனும் பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி, பொருத்திகள்; கட்டிடங்கள், வாகனங்கள் அல்லது வேறு மூலதனச் சொத்துக்கள், அல்லது

(ஆ) (1) எந்தத் தொழில் 4 ஆம் பிரிவின்கீழ் மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதோ, அந்த ஏதேனும் தொழி லில் பயன்படுத்துவதற்காக; அல்லது

(1) ஏதேனும் விலக்களிக்கப்பட்ட பொருட்களின் உற்பத்தியில் பயன் படுத்துவதற்காக,

கொள்வனவு செய்யப்பட்ட எவையேனும் பொருட்கள்,

(4) எவரேனும் ஆளினால் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரிக்கு மேலாக இப்பிரிவின்கீழ்க் கழிக்கப்பட்டதும், (3) ஆம் உட்பிரிவின் கீழ் பிடித்து வைத்தல் மொத்த விற்பனை வரவு வரி அதற்கெதிராக எதிரீடு செய்யப்படக்கூடியதுமான அத்தகைய பிடித்து வைத்தல் மொத்த விற்பனை வரவு வரியின் மேன்மிகை எதுவும் அந்த ஆளுக்கு மீளளிக்கப்படுதலாகாது. ஆனால் அடுத்துப் பின்வரும் ஆண்டுக்கும் அவ்வாறாக ஒவ்வோர் ஆண்டுக்கும் அந்த ஆளினால் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியில் இருந்து கழிக்கப்படலாம்.

50ஆ. விவரத் திரட்டுக்களைக் கொடுத்துதவுதல், தவறுகைக்கான தண் டங்களை விதித்து அறவிடுதலும், சுமத்தலும் அத்துடன் மொத்த விற்பனை வரவு வரியை மீளளித்தல் ஆகியன தொடர்பிலான இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இந்த அத்தியாயத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான பிடித்துவைத்தல் மொத்த விற்பனை வரவு தொடர்பிலான அல்லது அது பற்றிய விவரத்திரட்டுகளைக் கொடுத்துதவல், தவறுகைக்கான தண்டங்களை விதித்து அறவிடுதல், சுமத்தல் அத்துடன் மீளளித்தல் என்பவற்றுக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என் னும் பந்தியில் ''50 ஆம் பிரிவினது (1) ஆம் உட்பிரிவின்'' என்னும் சொற் களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''50 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அல்லது 50அ என்னும் பிரிவினது (1) ஆம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. இச்சட்டத்தின் சிங்கள், தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ் வாமை காணப்படும் சந்தருப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம்

*[1989, மே மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**முறையே 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும், 1990 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுகளுக்காக வருமானவரி விதிக்கப்படற்குரிய ஒவ்வோர் ஆள்மீதும், அத்தகைய ஆளினால் அத்தகைய ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்குமாகச் செலுத்தப்படற்பாலதான வருமான வரியைத் தொடர்புறுத்திப் பார்ப்பதன் மூலம் மிகைவரியொன்றை விதிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் ''ஓர் இயைபான ஆண்டு'' என இச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்படுகின்றதான 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 1991 மார்ச் 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் முடிவடைகின்ற வரி மதிப்பீட்டாண்டு எதற்குமென வருமானவரி விதிக்கப்படற்குரியவராக உள்ளவரான ஆள் ஒவ்வொருவரும், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இயைபான ஆண்டு ஒன்றுக்கென அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின்மீது, அத்தகைய வருமானவரியின் பதினைந்து சத வீதப்படி கணக்கிடப்படும் (இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தில் ''மிகைவரி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மிகைவரியொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

3. இச்சட்டத்தின் கீழ் மிகைவரி செலுத்துவதற்கு ஆளாகும் ஒவ்வோர் ஆளும், வரி மதிப்பீடு எதுவும் அவர்மீது செய்யப்படவில்லை என்பது எவ்வாறிருப்பினும்—

(i) (அ) 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு அவராற் செலுத்தப்படற்பாலதான மிகை வரித் தொகையின் ஐம்பது சத வீதத்திற்குக் குறையாத தொகையை 1989 ஓகத்து 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும் அத்துடன்

(ஆ) மீதியை 1989 நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்; அத்துடன்

(ii) (அ) 1990 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு அவராற் செலுத்தப்படற்பாலதான மிகை வரித் தொகையின் 50 சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1990 ஆம் ஆண்டு ஓகத்து 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

(ஆ) மீதியை 1990 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

4. உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடு களுக்கிணங்க (அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவினால் வதிவற்ற வராகக் கருதப்படுகின்றவரான ஊழியர் ஒருவராக அல்லாத) எந்த ஊழியரின் ஊதியத்திலிருந்து ஏதேனும் இயைபான ஆண்டுக்கான வருமானவரி கழிக்கப்படற் பாலதானதாக இருக்கின்றதோ, அந்த ஊழியர் எவரையும் தொழிலுக்கமர்த்து கின்ற தொழில்தருநர் ஒவ்வொருவரும்—

(அ) 1989 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு, அந்த ஆண்டுக்கு, அந்த ஊழியரின் ஊதியத்திலிருந்து கழிக்கப்படற்பாலதான மொத்த வருமானவரியின்,

(i) அத்தகைய ஊழியருக்கு 1989 ஆம் ஆண்டு யூலை மாதத்திற்குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து $7\frac{1}{2}$ சதவீதத்தையும்; அத்துடன்

(ii) அத்தகைய ஊழியருக்கு 1989 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்திற் குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து $7\frac{1}{2}$ சதவீதத்தையும்; அத்துடன்

(ஆ) 1990 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு, அந்த ஆண்டுக்கு, அந்த ஊழியரின் ஊதியத்திலிருந்து கழிக்கப்படற்பாலதான மொத்த வருமான வரியின்,

(i) அத்தகைய ஊழியருக்கு 1990 ஆம் ஆண்டு யூலை மாதத்திற்குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து $7\frac{1}{2}$ சதவீதத்தையும்; அத் துடன்

(ii) அத்தகைய ஊழியருக்கு 1990 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து $7\frac{1}{2}$ சதவீதத்தையும்,

இச்சட்டத்தின்கீழ்ச் செலுத்தப்படற்பாலதான மிகை வரியாகக் கழித்தலும் வேண்டும்.

எவ்வாறாயினும், இப்பிரிவின் கீழ், எவரேனும் தொழில் தருநரால், அவரது ஊழியத்திலுள்ள எவரேனும் ஊழியருக்கு இயைபான ஆண்டு எதிலும், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களுக்குக் கொடுபடற்பாலதான ஊதியத்தி லிருந்து செய்யப்பட்ட கழிப்பனவுகளின் கூட்டு மொத்தமானது, அந்த இயைபான ஆண்டுக்கு அத்தகைய ஊழியரின் ஊதியத்தினின்று கழிக்கப்பட்ட வருமானவரி 15 சதவீதத்திற்குக் குறைவானதாக இருக்குமிடத்து, தொழில் தருநர், அந்த இயைபான ஆண்டில் அந்த ஊழியருக்கு மார்ச்சு மாதத்திற்குக் கொடுபடற்பால தான ஊதியத்திலிருந்து பற்றாக்குறைப் பணத்தொகைக்குச் சமமான மேலு மொரு தொகையைக் கழித்தல் வேண்டும்.

5. (1) இயைபான ஆண்டொன்றுக்குச் செலுத்தப்படற்பாலதான மிகை வரியின் தவணைக் கட்டணமொன்று அல்லது அத்தகைய தவணைக் கட்டணத்தின் பாகம் அத்தகைய தவணைக் கட்டணத்தின் கொடுப்பனவுக்கென 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேதிகளில் அல்லது அவற்றிற்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, மிகைவரியின் அத்தகைய தவணைக் கட்டணம் அல்லது அதன் பாகம் தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன்—

(அ) அத்தகைய மிகைவரி ஓர் ஆளினால் செலுத்தப்படற்பாலதாக இருக்குமிடத்து, அத்தகைய ஆள்; அத்துடன்

(ஆ) அத்தகைய மிகைவரி ஒருவருக்கு மேற்பட்ட ஆட்களினால் அல்லது ஒரு பங்காண்மையால் செலுத்தப்படற்பாலதாக இருக்குமிடத்து, அத்தகைய ஆட்களுள் ஒவ்வொருவரும் அல்லது அத்தகைய பங்காண்மையிலுள்ள பங்காளர் ஒவ்வொருவரும்.

இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணை தவறியவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) எவரேனும் ஆளினால் இயைபான ஆண்டொன்றுக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் மிகை வரி தவணை தவறியிருக்குமிடத்து, தவணை தவறியவர், தவணை தவறியுள்ள மிகைவரியுடன் மேலதிகமாக—

(அ) தவணை தவறியுள்ள தொகையின் ஐந்து சதவீதத்துக்குச் சமனான பணத்தொகையொன்றையும்; அத்துடன்

(ஆ) தவணை தவறியுள்ள ஏதேனும் தொகை, அது தவணை தவறத் தொடங்கிய பின்னர் முப்பது நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் செலுத்தப்படாதிருக்குமிடத்து, அது தவணை தவறியிருக்கின்ற மூன்று மாதங்களைக் கொண்ட, மேலதிகக் காலப் பகுதி அல்லது அத்தகைய காலப் பகுதியின் பாகம் ஒவ்வொன்றும் தொடர்பில் தவணை தவறியுள்ள தொகையின் ஐந்து சத வீதத்துக்குச் சமனான மேலதிகப் பணத்தொகையையும்,

தண்டப் பணமொன்றாகச் செலுத்துதல் வேண்டும்:

ஆயின்,

(i) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் தண்டப்பணமொன்றாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகை, எந்த விடயத்திலும் தவணை தவறியுள்ள மிகை வரியின் ஐம்பது சத வீதத்தை விஞ்சுதலாகாது;

(ii) இச்சட்டத்தின் கீழ் மிகைவரி செலுத்துவதற்கு ஆளாகின்றவரான எவரேனும் ஆள்—

(அ) 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதி தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு—

*1989* ஏப்பிறில் *1* ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரி மதிப்பிட்டாண்டிற்கு, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரித் தொகையின்—

(i) ஏழரைச் சத வீதத்திற்குக் குறையாத தொகையை, *1989*, ஓகத்து *15* ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும், அத்துடன்

(ii) ஏழரைச் சத வீதத்திற்குக் குறையாத தொகையை, *1989* நவம்பர் *15* ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும், அத்துடன்

(ஆ) *1990*, ஏப்பிறில் *1* ஆம் தேதி தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு—

*1989*, ஏப்பிறில் *1* ஆம் தேதி தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டுக்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ், அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரித் தொகையின்—

(i) ஏழரைச் சத வீதத்திற்குக் குறையாத தொகையை *1990* ஓகத்து *15* ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும், அத்துடன்

(ii) ஏழரைச் சத வீதத்திற்குக் குறையாத தொகையை *1990* நவம்பர் *15* ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

மிகைவரியாகச் செலுத்துகின்றவிடத்து, அத்தகைய ஆள் அவராற் செலுத்தப்பட்ட தொகை மீது, அந்த இயைபான ஆண்டுக்கு, அவரால் செலுத்தப்படற்பாலதான மிகை வரியின் விஞ்சிய தொகையை—

*1989*, ஏப்பிறில் *1* ஆம் தேதி தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில், *1990* நவம்பர் *30* ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும், அத்துடன்

*1990*, ஏப்பிறில் *1* ஆம் தேதி தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில், *1991*, நவம்பர் *30* ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

செலுத்தினால், *3* ஆம் பிரிவின் கீழ், அவர் எந்தக் கொடுப்பனவைச் செய்யும்படி தேவைப்படுத்தப்படுகின்றாரோ, அந்தக் கொடுப்பனவு தொடர்பிலான தண்டப்பணம் எதனையும் செலுத்துவதற்கு ஆளாதலாகாது,

(iii) இப்பிரிவின் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தண்டப் பணத்தின் குறைப்பு அல்லது விட்டுவிடுகை, விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நியாயமானதும் ஒப்புரவானதும் என ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தோற்றுமாயின், ஆணையாளர், தலைமையதிபதி அந்தகைய தண்டப் பணத்தைக் குறைக்கலாம் அல்லது விட்டுவிடலாம்.

6. உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான வருமானவரி தொடர்பிலான விவரத் திரட்டுக்களைக் கொடுத்துதவுதல், வருமானவரியைக் கழித்தல், அத்தகைய வரியின் மதிப்பீடு, மதிப்பீடுகளுக்கெதிரான மேன்முறையீடுகள், அத்தகைய வரியின் கொடுப்பனவு, அறவீடு, மீளளிப்பு என்பன தொடர்பில் அச்சட்டத்தின் XIII ஆம் அத்தியாயத்தினதும் XV முதல் XIX அத்துடன் XXI முதல் XXVI வரையிலான அத்தியாயங்களினதும் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் கீழ்ச் செலுத்தப்படற்பாலதானவொரு மிகைவரி தொடர்பில் விவரத் திரட்டுக்களைக் கொடுத்துதவுதல், அத்துடன் அத்தகைய மிகைவரியின் கழிப்பனவு, மதிப்பீடு, மதிப்பீட்டிற்கெதிரான மேன்முறையீடுகள், கொடுப்பனவு, அறவீடு, மீளளிப்பு என்பவற்றிற்கு, பின்வரும் திரிபுகளுக்கு அமைவாக, ஏற்புடையனவாதல் வேண்டும்:—

(அ) ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் ஓர் இயைபான ஆண்டுக்கான அவரால் செலுத்தப்படற்பாலதான மிகைவரியின் விவரத் திரட்டைக் கொடுத்துதவ வேண்டுமென இச்சட்டத்தின் மூலம் சுமத்தப்பட்ட தேவைப்பாடு, அத்தகைய ஆள் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 92 (1) ஆம் பிரிவின் கீழ் அல்லது 92 (2) ஆம் பிரிவின் கீழ் அவ்வாண்டிற்கான அவரது வருமானத்தின் விவரத் திரட்டைக் கொடுத்துதவுவாராயின், போதியளவில் இணங்கியொழுகப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) வரி மதிப்பீட்டாளர் ஒருவர், எவரேனும் ஆளின் மீது உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் இயைபான ஆண்டுக்கான அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் வரி மதிப்பீடொன்றை அல்லது மேலதிக வரி மதிப்பீடொன்றைச் செய்யுமிடத்து, வரி மதிப்பீட்டாளர், அதே நேரத்திலும் அதே படிவத்திலும், இச்சட்டத்தின் கீழ் அவ்வாண்டிற்காக அத்தகைய ஆளினுல் செலுத்தப்படற்பாலதான மிகை வரியின் விடயத்திற்கேற்ருற்போல வரி மதிப்பீடு ஒன்றை அல்லது மேலதிக வரி மதிப்பீடொன்றைச் செய்யலாம். விடயத்திற்கேற்றாற்போல, வரி மதிப்பீடுகள் அல்லது மேலதிக வரி மதிப்பீடுகள், அந்தந்தச் சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட வெவ்வேறான வரி மதிப்பீடுகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) ஏதேனும் இயைபான ஆண்டுக்காக உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் எவரேனும் ஆள் மீது விதிக்கப்படும் வருமான வரியின் தொகையினைக் கூறுகின்ற வரி மதிப்பீட்டு அறிவித்தல், உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தின் 116 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆளுக்குக் கொடுக்கப்பட்டவிடத்து, அத்தகைய அறிவித்தல், அந்த ஆண்டுக்காக இச்சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளின்மீது விதிக்கப்படும் மிகைவரியின் தொகையையும் உள்ளடக்கலாம். இவ்வறிவித்தல்கள் அந்தந்தச் சட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட வெவ்வேறான அறிவித்தல்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) ஏதேனும் இயைபான ஆண்டுக்காக, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரி மதிப்பீடொன்றிற்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்படுமிடத்து, அத்தகைய மேன்முறையீடு, அந்த ஆண்டுக்காக, இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்

பாலதான மிகைவரிக்கு எதிரான மேன்முறையீடொன்றையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறே தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(உ) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XXI ஆம் அத்தியாயத்தின்கீழ் நீதவானொருவருக்குச் சான்றிதழொன்று வழங்கப்பட்டவிடத்து, அல்லது எவரேனும் ஆளுக்கு அறிவித்தலொன்று, கூற்றொன்று, அல்லது சான்றிதழொன்று வழங்கப்பட்டவிடத்து விடயத்திற்கேற்றாற்போன்று அத்தகைய அறிவித்தல், கூற்று அல்லது சான்றிதழானது, இச்சட்டத்தின் சீழ் ஏதேனும் தவணை தவறிய மிகைவரியின் விபரங்களையும் உள்ளடக்கலாம். விடயத்திற்கு ஏற்றாற்போன்று, இவ்வறிவித்தல்கள், கூற்றுக்கள், அல்லது சான்றிதழ்கள் அந்தந்தச் சட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட வெவ்வேறான அறிவித்தல்கள், கூற்றுக்கள் அல்லது சான்றிதழ்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

7. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

8. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினால் அன்றி—

''வரி மதிப்பிடற்குரிய வருமானம்'', ''வரி மதிப்பீட்டாளர்'', ''ஆணையாளர் தலைமையதிபதி'', ''வதிவற்ற கம்பனி'', ''ஆள்'', ''இலாபங்களும் வருமானமும்'', ''வதிவுள்ள கம்பனி'', ''வரி மதிப்பீட்டாண்டு'' என்பன உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் அவற்றிற்கெனக் குறித்தொதுக்கப்பட்ட அவ்வப் பொருள்களை உடையனவாகும்;

''தொழில் தருநர்'', ,,ஊழியர்'', ''ஊதியம்'' என்பன உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XV ஆம் அத்தியாயத்தில் அவற்றிற்கெனக் குறித்தொதுக்கப்பட்ட அவ்வப் பொருள்களை உடையனவாகும்;

''வருமான வரி'' என்பது, எவரேனும் ஆள் தொடர்பிலும், இயைபான ஆண்டு ஒன்று தொடர்பிலும், இரண்டாம் பிரிவிலும், அத்துடன்—

(i) வதிவுள்ள கம்பனியொன்று தொடர்பாகவும், அந்த இயைபான ஆண்டுக்காக அக்கம்பனியால் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ்ச் செலுத்தப்படற்பாலதான வருமான வரி எனப் பொருளாகும்;

(ii) வதிவற்ற கம்பனியொன்று தொடர்பாகவும், உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியின் அல்லது (ii) உட்பந்தியின் கீழ், அந்த இயைபான ஆண்டுக்காக அக்கம்பனியால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரியைக் கழித்து, அந்த ஆண்டுக்காக அக்கம்பனியால் அச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான வருமான வரி எனப் பொருள்படும்;

(iii) அந்த இயைபான ஆண்டுக்காக எந்த வதிவுள்ள தனியாள் ஒருவரின் இலாபங்களும், வருமானமும் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊதியத்திலிருந்து பெறப்படும் எவையேனும் இலாபங்களை உள்ளடக்குகிறதோ அந்த வதிவுள்ள தனியாள் ஒருவர் தொடர்பாகவும், ஊழியத்திலிருந்து கிடைத்த அத்தகைய இலாபங்கள் இயைபான ஆண்டுக்கு அவரது இலாபங்களினதும், வருமானத்தினதும் பாகமாய் அமையவில்லையாயின், உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தின் கீழ் அத்தகைய தனியாளினால் செலுத்தப்படற்பாலதாக இருந்திருக்கக்கூடியவாறான அத்தகைய வருமான வரி எனப் பொருளாகும்.

(iv) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவினால் வதிவற்ற ஒருவர் எனக் கருதப்படுகின்றவரான தனியாளொருவர் தொடர்பாகவும், அந்த இயைபான ஆண்டுக்காக இலங்கையில் ஊழியத்திலிருந்து கிடைத்த அவரது இலாபங்கள், அந்த ஆண்டுக்கான அவரது இலாபங்களினதும், வருமானத்தினதும் பாகமாக அமையாதிருப்பின், உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தின் கீழ் அத்தகைய தனியாளினால் செலுத்தப்படற்பாலதாக இருந்திருக்கக் கூடியவாறான அத்தகைய வருமான வரி எனப் பொருளாகும்; அத்துடன்

(v) வேறெவரேனும் ஆள் தொடர்பாகவும், அந்த இயைபான ஆண்டுக்காக அவ்வாளினால் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான வருமான வரி என்று பொருளாகும்; அத்துடன்

''*உண்ணாட்டரசிறைச் சட்டம்*'' என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் எனப் பொருளாகும்.

## 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, செல்வவரி மீதான மிகைவரிச்சட்டம்,

*[1989, மே மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

முறையே 1989 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்றும் 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்றும் தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டுகளுக்கான செல்வவரி விதிக்கப்படற்குரிய ஒவ்வோர் ஆள் மீதும், அத்தகைய ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிலும் செலுத்தப்படற்பாலதான செல்வவரியைத் தொடர்புறுத்திப் பார்ப்பதன் மூலம் மிகை வரியொன்றை விதிப்பதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புடையவையும் அதன் இடைநேர்விளைவானவையுமான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்.

1. இச்சட்டமானது 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, செல்வ வரி மீதான மிகைவரிச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (''இயைபான ஆண்டு'' என இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்படும்) 1989 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1991 மார்ச்சு 31 இற்குப் பிந்தாது தொடங்குகின்றதான ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கென உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் செல்வ வரி விதிக்கப்படற்குரியவராக உள்ளவரான ஆள் ஒவ்வொருவரும், எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இயைபான ஆண்டுக்கென அவரால் செலுத்தப்படற்பாலதான செல்வ வரியின் மீது, அத்தகைய செல்வ வரியின் பதினைந்து சத வீதப்படி கணக்கிடப்படும் மிகைவரியொன்றை (அது இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தில் 'மிகை வரி' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அந்த இயைபான ஆண்டுக்கெனச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

3. இச்சட்டத்தின் கீழ் மிகைவரி செலுத்துவதற்கு ஆளாகும் ஒவ்வோர் ஆளும், அவர்மீது வரி மதிப்பீடு செய்யப்படாது இருப்பினும்—

(i) 1989 ஆம் ஆண்டு ஏப்பிரல் 1 ஆம் தேதி தொடங்குகின்றதான இயைபான ஆண்டில் செலுத்தப்படற்பாலதான மிகைவரியின் தொகையில்—

(அ) ஐம்பது சத வீதத்திற்குக் குறையாத தொகையை 1989 ஓகத்து 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்; அத்துடன்

(ஆ) மீதியை 1989 நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்; அத்துடன்

(ii) 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டில் அவரால் செலுத்தப்படற்பாலதான மிகைவரியின் தொகையில்—

(அ) ஐம்பது சத வீதத்திற்குக் குறையாத தொகையை 1990 ஓகத்து 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்; அத்துடன்

(ஆ) மீதியை 1990 நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

ஆணையாளர் தலைமை அதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

4. (1) மிகைவரியின் தவணைக் கட்டணமொன்று அல்லது அத்தகைய தவணைக் கட்டணத்தின் பாகமொன்று அத்தவணைக் கட்டணத்தின் கொடுப்பனவுக்கென 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேதிகளில் அல்லது அவற்றிற்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, அத்தகைய மிகைவரியின் தவணைக் கட்டணமொன்று அல்லது அதன் பாகமொன்று தவணை தவறியதாகக் கருதப்படுவதுடன் எவரால் மிகை வரி செலுத்தப்பட வேண்டுமோ அவர் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணை தவறியவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) எவரேனும் ஆளினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் மிகை வரியானது தவணை தவறி இருக்குமிடத்து, தவணை தவறிய மிகை வரிக்கு மேலதிகமாக அவ்வாள்—

(அ) தவணை தவறியுள்ள தொகையின் ஐந்து சத வீதத்திற்குச் சமமான தொகையொன்றையும்; அத்துடன்

(ஆ) தவணை தவறியுள்ள ஏதேனும் தொகை அது தவணை தவறத் தொடங்கிய பின்னர் முப்பது நாட்கள் முடிவடைவதற்குமுன்னர் செலுத்தப்படாதிருக்குமிடத்து, அது தவணை தவறியிருக்கின்ற மூன்று மாதங்களைக் கொண்ட மேலதிக காலப் பகுதி அல்லது அத்தகைய காலப் பகுதியின் பாகம் ஒவ்வொன்றும் தொடர்பில் தவணை தவறியுள்ள தொகையின் ஐந்து சத வீதத்திற்குச் சமனான மேலதிகப் பணத் தொகையொன்றையும்,

தண்டப்பணமொன்றுகச் செலுத்துதல் வேண்டும்:

ஆயினும்——

(i) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் தண்டப்பணமொன்றாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகையானது எந்த விடயத்திலும் தவணை தவறியுள்ள மிகை வரியின் ஐம்பது சத வீதத்தை விஞ்சுதலாகாது;

(ii) இச்சட்டத்தின் கீழ் மிகைவரி செலுத்துவதற்கு ஆளாகின்றவரான எவரேனும் ஆள்——

(அஅ) 1989, ஏப்பிரல் 1 ஆம் தேதி தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் 1988 ஏப்பிரல் 1 ஆம் தேதி தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான செல்வவரியின் தொகையின்——

(i) ஏழரைச் சத வீதத்திற்குக் குறையாத தொகையை 1989 ஆம் ஆண்டு ஒகத்து 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும், அத்துடன்

(ii) ஏழரைச் சத வீதத்திற்குக் குறையாத தொகையை 1989 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும், அத்துடன்

(ஆஆ) 1990 ஏப்பிரல் 1 ஆம் தேதி தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ், 1989 ஏப்பிரல் 1 ஆம் தேதி தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கென அவரால் செலுத்தப்படற்பாலதான செல்வ வரித் தொகையின்—

(i) ஏழரைச் சத வீதத்திற்குக் குறையாத தொகையை 1990 ஒகத்து 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும், அத்துடன்

(ii) ஏழரைச் சத வீதத்திற்குக் குறையாத தொகையை 1990 நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

மிகைவரியாகச் செலுத்துகின்றவிடத்து, அத்துடன் அத்தகைய ஆள் அந்த இயைபான ஆண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான மிகை வரியின் விஞ்சு தொகையை—

(i) 1989 ஆம் ஆண்டு ஏப்பிரல் 1 ஆம் தேதி தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும், அத்துடன்

(ii) 1990 ஆம் ஆண்டு ஏப்பிரல் 1 ஆம் தேதி தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

செலுத்தினால் 3 ஆம் பிரிவின்கீழ், அவர் எந்தக் கொடுப்பனவைச் செய்யுமாறு தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்தக் கொடுப்பனவு தொடர்பில் ஏதேனும் தண்டப் பணத்துக்கு ஆளாதல் ஆகாது.

(2) இப்பிரிவின் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தண்டப் பணத்தின் குறைப்பு அல்லது விட்டுவிடுகையானது, விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நியாயமானதும் ஒப்புரவானதுமென ஆணையாளர் தலைமை அதிபதிக்குத் தோன்றுமாயின் ஆணையாளர் தலைமை அதிபதி தண்டப் பணத்தைக் குறைக்கலாம் அல்லது விட்டுவிடலாம்.

5. உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான செல்வவரி தொடர்பிலான விபரத் திரட்டுக்களைக் கொடுத்துதவுதல், அத்தகைய வரியின் வரி மதிப்பீடு, வரி மதிப்பீட்டுக்கெதிரான மேன்முறையீடுகள், கொடுப்பனவு, அறவீடு, மீளளிப்பு என்பன தொடர்பில் அச்சட்டத்தின் XIII ஆம்

## பொருளாதாரச் செயலாற்றம், பிரச்சினைகள், கொள்கைகள்—1989

1989 இல் இலங்கையின் பொருளாதாரம் சார்புரீதியில் மிதமான பொருளாதார வளர்ச்சி வீதத்தினை அடைந்துள்ளது. உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1988 இன் 2.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2.3 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதே போக்கினைத் தொடர்ந்து, வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானப் பாய்ச்சலை அனுமதித்ததன் மூலம் பெறப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உண்மை மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதமான 2.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.2 சதவீதங் கொண்ட வளர்ச்சியைக் காட்டியது.

### அட்டவணை 1.1

### தேசிய வருமானப் புள்ளி விபரங்கள் 1987—1989

| விடயம் | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 1987 | 1988* | 1989* | 1988* | 1989* |
| 1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 177,731 | 203,516 | 228,373 | 14.5 | 12.2 |
| 2. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 115,922 | 119,050 | 121,729 | 2.7 | 2.3 |
| 3. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 173,395 | 198,250 | 222,467 | 14.3 | 12.2 |
| 4. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 113,307 | 116,214 | 118,791 | 2.6 | 2.2 |
| 5. நடுவாண்டுக் குடித்தொகை ('000) ... | 16,361 | 16,586 | 16,806 | 1.4 | 1.3 |
| 6. தலைக்குரிய மொ. தே. உ. | | | | | |
| (i) நடைமுறை விலைகளில்(ரூபாய்களில்) | 10,598 | 11,953 | 13,237 | 12.8 | 10.7 |
| (ii) நிலையான விலைகளில்(ரூபாய்களில்) | 6,925 | 7,007 | 7,068 | 1.2 | 0.9 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1989 இன் வளர்ச்சிச் செயலாற்றம் மிகவும் உற்சாகம் தருவதாக இல்லை என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும். எனினும் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதித்தது மட்டுமன்றி வியாபாரத்தின் மீதான நம்பிக்கைகளையும் சிதறடித்த பரவலான உள்நாட்டுக் குழப்பங்கள், வேலை நிறுத்த ஏற்பாடுகள், வேளாண்மை உற்பத்திகளைக் கடுமையாகப் பாதித்த பாதகமான வானிலை போன்ற கடினமான நிலைமைகளின் கீழ் 1989 இல் பொருளாதாரம் தொழிற்பட வேண்டியிருந்தமையைக் கருத்திற்கொள்கையில் இவ்வளர்ச்சிச் செயலாற்றம் மிகத் திருப்திகரமானது எனக் கருதமுடியும். இது, பொருத்தமான கொள்கைகளும், சரியான ஊக்குவிப்புக்களும் கைக்கொள்ளப்படுமிடத்து பொருளாதார இயலளவு தீவிரமான தாக்கங்களுக்கெல்லாம் ஈடுகொடுத்துச் சாதகமான பெறுபேறுகளைத் தோற்றுவிக்குமென்பதனைப் பிரதிபலிக்கின்றது.

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில், மொத்தத் தேசிய உற்பத்தி 1989 இல் ரூ. 22,200 கோடியாக விளங்கி, 1988 இனைவிட 12.2 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைக் கொண்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதே வேளை பொருளாதாரத்தின் பொதுவான விலை மாற்றங்களின் குறிகாட்டியான உள்ளடக்க மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி 9.8 சதவீதத்தினால் அதிகரித்த துடன், இவ்வீதம் 1988 இல் பதிவு செய்யப்பட்ட 11.5 சதவீதத்திலும் பார்க்க சிறிதளவு குறைவானதாகவும் இருந்தது. இதன்படி, நிலையான (1982) விலை களில் மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 12,200 கோடியாக மதிப்பிடப்பட்டு 2.2 சதவீதமான வளர்ச்சி வீதத்தினைப் பிரதிபலித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதம் சிறிதளவு குறைவாக இருந்தமைக்கு வெளிநாட்டுக் காரணி வருமானத்தின், முக்கியமாக வட்டிக்கொடுப்பனவுகளின் தேறிய வெளிப்பாய்ச்சலே காரணமாகும்.

பதிவாளர் நாயகத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, இலங்கையின் குடித் தொகை 1989 இல் 1.3 சதவீதத்தினால் 168 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதன்படி 1989 இல் நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 13,237 (ஐ.அ. டொலர் 367) என மதிப்பிடப்பட்டுள்ளது. 1989 இல் நடைமுறை விலைகளில் தலைக்குரிய வருமானம் 10.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தபோதும் உண்மை நியதிகளில் அதிகரிப்பு 0.9 சதவீதமாக மட்டுமே இருந்தது.

உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1988 இன் ரூ. 2,670 கோடியிலிருந்து 1989 இல் ரூ. 3,060 கோடிக்கு அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக நோக்குகையில் உள்நாட்டுச் சேமிப்புக்கள் 12.0 சதவீதத்திலிருந்து 12.1 சதவீதத்திற்கு அதிகரித் தன. அதேவேளை தேசிய சேமிப்புக்களின் விகிதமும்—சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தேசிய சேமிப்புக்களின் விகிதம்—இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் 14.2 சதவீதத்திலிருந்து 14.0 சதவீதத்திற்கு வீழ்ச்சி யடைந்தது. இவ்வாண்டின் குறைவான வளர்ச்சி வீதத்தினையும், பொதுவான உறுதியற்ற நடவடிக்கைகளையும் கருத்திற் கொள்கையில், சேமிப்பு வீதத்தில் ஏற்பட்ட இச்சிறிய வீழ்ச்சி வியப்பிற்குரியதொன்றல்ல.

1989 இல் மூலதனவாக்க வீதம் பின்னடைவிற்குட்பட்டிருந்தது. எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களைக் கருத்திற்கொண்டு பார்க்கையில் இவ்விடயம் மிகத் தீவிர சிந்தனைக்குரிய தொன்றாகவுள்ளது. இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் உட்பட மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1988 இன் 10 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில் 1989 இல் 8 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது இதன் விளைவாகச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான மொத்த உள்நாட்டு மூலதனவாக்க விகிதம் 1988 இன் 22.8 சதவீதத்திலிருந்து, 1989 இல் 21.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அண்மைய ஆண்டுகளில் காணப்பட்ட பொதுவான தன்மைக்கு மாறாக, 1989 இல் மூலதனவாக்கத்திற் கான பெரும் பங்கு தனியார்துறையிலிருந்தே கிடைத்தது. தனியார்துறை,

## மொத்தத் தேசிய உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.2

## மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியும் உள்ளடக்கமும் 1987—1989 நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்

| துறை | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1987 | 1988* | 1989* | 1987 | 1988* | 1989* |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் … … | 27,409 | 27,984 | 27,666 | — 5.8 | 2.1 | — 1.1 |
| இதில்: | | | | | | |
| 1.1 தேயிலை … … | 2,750 | 2,926 | 2,668 | 1.0 | 6.4 | — 8.8 |
| 1.2 இறப்பர் … … | 765 | 770 | 697 | — 10.6 | 0.7 | — 9.5 |
| 1.3 தெங்கு … … | 2,967 | 2,501 | 3,210 | — 24.6 | — 15.7 | 28.3 |
| 1.4 நெல் … … | 5,423 | 6,312 | 5,258 | — 18.0 | 16.4 | — 16.7 |
| 1.5 ஏனையவை (ஏனைய வேளாண்மை, காட்டுத்தொழிலும் கடற்றொழிலும்) … … | 15,504 | 15,475 | 15,833 | 3.5 | — 0.2 | 2.3 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் … … | 3,112 | 3,392 | 3,576 | 19.0 | 9.0 | 5.4 |
| 3. தயாரிப்பு … | 18,748 | 19,622 | 20,488 | 6.8 | 4.7 | 4.4 |
| 3.1 மரப்பயிர் பதனிடல் … | 3,340 | 3,273 | 3,257 | 3.6 | — 2.0 | — 0.5 |
| 3.2 ஏனையவை … … | 15,408 | 16,349 | 17,231 | 7.5 | 6.1 | 5.4 |
| 4. கட்டடவாக்கம் … … | 8,338 | 8,463 | 8,514 | 1.8 | 1.5 | 0.6 |
| 5 பணிகள் … … | 58,315 | 59,589 | 61,485 | 2.7 | 2.2 | 3.2 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி … | 115,922 | 119,050 | 121,729 | 1.5 | 2.7 | 2.3 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் … | — 2,615 | — 2,836 | — 2,938 | — | — | — |
| 8. மொத்த தேசிய உற்பத்தி … | 113,307 | 116,214 | 118,791 | 1.6 | 2.6 | 2.2 |

* தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அரச கூட்டுத்தாபனங்கள் என்பவற்றின் இணைந்த மூலதனவாக்கம் முன்னைய ஆண்டின் 7.8 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில், 16 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, அரசின் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் முன்னைய ஆண்டினைவிட 14.5 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றமைக்கு அரசின் மூலதனச் செலவு கட்டுப்படுத்தப்பட்டமையே காரணமாகும்.

1989 இன் மந்தமான வளர்ச்சிச் செயலாற்றத்திற்குப் பொறுப்பாக இருந்த முக்கிய காரணி வேளாண்மைத்துறையின் பொலிவு குறைந்த செயலாற்றமேயாகும். பொதுவாக வேளாண்மைத்துறையின் (காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடி உட்பட) கூட்டப்பட்ட பெறுமதி முன்னைய ஆண்டின் 2.1 சதவீதமான வளர்ச்சிக்கு மாறாக 1.1 சதவீதங் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. வேளாண்மைத் துறையில், வளர்ச்சிப்போக்கு இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் முற்றும் நேர் மாறாகக் காணப்பட்டது. 1988 இல் தெங்கு தவிர்ந்த அனைத்துத் துணைத் துறைகளும் சாதகமான வளர்ச்சியைக் காட்டியிருக்கையில் 1989 இல் தெங்குத் துறை மட்டும் சாதகமான வளர்ச்சியைக் காட்டியது. தேயிலையினதும். இறப்பரினதும் கூட்டப்பட்ட பெறுமதி 1989 இல் முறையே 8.8 சதவீதத்தினாலும்

## கைத்தொழில் மூலங்களின்படியான மொத்த உள்நாட்டு உற்பத்தி

*நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்*




இலங்கை மத்திய வங்கி.

9.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. நெல் துறையில் பொதுவான வெளியீடு 1988 இன் 16.4 சதவீதங் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 16.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், 1989 இல் தெங்குத்துறை குறிப்பிடத்தக்க விரிவாற்றலைக் காட்டியதுடன், 1988 இல் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் காலங்கடந்த தாக்கம் காரணமாக அதன் வெளியீடும் 28 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை காட்டுத்தொழில், கடற்றொழில் என்பனவற்றை உள்ளடக்கிய ''ஏனைய வேளாண்மைத்'' துணைத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதி முன்னைய ஆண்டின் 0.2 சதவீத வீழ்ச்சிக்கெதிராக 1989 இல் 2.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பொதுவாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மைத்துறை ஏறத்தாள 24 சதவீதத்தினை உதவுவதனால் இத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி 1989 இன் பொதுவான பொருளாதாரச் செயலாற்றத்தின்மீது முக்கிய தாக்கத்தினைக் கொண்டிருந்தது.

1989 இல் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிய முக்கிய உதவு காரணிகளில் ஒன்றாகத் தயாரிப்பு மற்றும் பணிகள்துறைகள் விளங்கியது. வேளாண்மைப் பதனிடல், தொழிற்சாலைக் கைத்தொழில்கள், சிறு கைத்தொழில்கள் என்பனவற்றை உள்ளடக்கிய தயாரிப்புத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு 4.4 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. தயாரிப்புத்துறையின் மொத்த உற்பத்தியில் ஏறத்தாள மூன்றிலிரண்டு பங்கினை வழங்கும் தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடு 6 சதவீதத்தினால் விரிவடைந்தது. இவ்வளர்ச்சி முழுவதும் தனியார்துறையிலிருந்தே கிடைத்தமை கடுமையான தாக்கங்களுக்கிடையிலும் தொழிற்படக்கூடிய அதன் இயலளவை எடுத்துக் காட்டுகின்றது. அதேவேளை பணிகள்துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 1989 இல் 3.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இத்துறையில் வங்கித்தொழிலும் காப்புறுதியும், வர்த்தகம், பொது நிருவாகமும் பாதுகாப்பும் என்பன சார்புரீதியில் உயர்ந்த வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன. எனினும் மின்வலு, வாயு, நீர் மற்றும் நலப்பணிகளின் கூட்டப்பட்ட பெறுமதி முன்னைய ஆண்டின் வளர்ச்சியான 3.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1.8 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்தது. பெரும்பாலும் ஏயர் லங்காவின் திருந்திய செயலாற்றத்தின் காரணமாக 1989 இல் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் துணைத்துறை நன்முறையில் செயலாற்றியது.

1989 இன் வளர்ச்சிக்கு உதவிய ஏனைய துறைகளினுள் சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் துறையின் வெளியீடு 5 சதவீதத்தினால் உயர்வடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வளர்ச்சியில் முக்கிய பங்கு, இவ்வாண்டின் வெளியீட்டில் 30 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த கனிப்பொருள் மணலிலிருந்தே கிடைத்தது. மறுபுறத்தில் கடந்த அண்மைக் காலத்தில் இத்துறைக்குள்ளே முன்னணியில் வளர்ந்துவரும் துணைத்துறையான இரத்தினக்கல் அகழ்வு 1989 இல் எதிர்பார்ப்புக்களுக்குக் கீழேயே செயலாற்றியிருக்கிறது. அதேவேளை 1988 இல் 1.5 சதவீத வளர்ச்சி வீதத்தினைப் பதிவுசெய்த கட்டுமானத்துறை 1989 இல் கட்டுப்படுத்தப்பட்ட அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் தாக்கங்களின் கீழ் 0.6 சதவீதத்தினால் மிகச் சிறிதளவில் மட்டும் வளர்ச்சியுற்றது.

பெரும்பாலான பயிர்களின் வெளியீடு வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தமையால் 1989 இல் வேளாண்மைத்துறை கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்தது. தேயிலை உற்பத்தி 9 சதவீதத்தினாலும், இறப்பர் உற்பத்தி 10 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தவேளையில் நெல் உற்பத்தி 17 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. முதன்மைப் பயிர்களிடையே தெங்கு மட்டும் இவ்வாண்டில் உற்பத்தியில் ஓரளவு முன்னேற்றத்தினைக் காட்டியது. பெரும்பாலான சிறு ஏற்றுமதிப் பயிர்களினதும், அதேபோன்று சிறு உணவுப் பயிர்களினதும் செயலாற்றம் ஏமாற்றமளிப்பதாகவே இருந்தது.

கடந்த இருபது ஆண்டுகளிலும் 1988 இல் ஆகக்கூடிய மட்டமான 2,270 இலட்சம் கிலோக்கிறாம்களை அடைந்த தேயிலை உற்பத்தி, 1989 இல் 2,070 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 9 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக வீழ்ச்சியடைந்தது. 1989 இல் உற்பத்தியிலேற்பட்ட வீழ்ச்சி அனைத்து மூன்று உயர வகைத் தேயிலைகளிலும் பிரதிபலித்ததெனினும் 830 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு ஏறத்தாள 14 சதவீதத்தினால் உற்பத்தி வீழ்ச்சியடைந்த தாழ்நிலப் பிரதேசங்களிலேயே மிகக் கூடுதலாகக் காணப்பட்டது. உயர்நிலத் தேயிலையின் வெளியீடு 740 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில், மத்தியநில வகைத் தேயிலையின் வெளியீடு 500 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 8 சதவீதத்தினால் குறைவடைந்தது. ஆண்டின் தொடக்கப் பகுதியில் நிலவிய வரண்ட நிலைமைகள், இரண்டாம் காலாண்டுப் பகுதியில் காணப்பட்ட பெரும் பருவக்காற்று மழை, தொடர்ச்சியான உள்நாட்டு அமைதியின்மையின் காரணமாகக் காணப்பட்ட தடங்கல்கள் என்பன குறைவான வெளியீட்டிற்குக் காரணமான முக்கிய காரணிகளாகும். வேலைநிறுத்தங்கள் மூலம் தேயிலைத் தொழிற்சாலைகள், மின்வழங்கல், மற்றும் போக்குவரத்து வசதிகள் பொறுப்பற்ற முறையில் அழிக்கப்பட்டமை, பயங்கரம், பதட்டம் ஆகிய சூழ்நிலைகள் காரணமாகப் பொதுவாகத் தேயிலைப் பயிர்ச்செய்கையாளர்களின் ஒழுங்குணர்வுகள் குறைவடைந்தமை என்பவற்றின் வடிவில் தேயிலைக் கைத்தொழிலின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதித்த உள்நாட்டுக் குழப்பங்களே 1989 இல் தேயிலைக் கைத்தொழிலை முடமாக்கிய மிக முக்கிய காரணியாக விளங்கியது.

குறைந்த வெளியீட்டின் விளைவாக, கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்ட தேயிலையின் அளவு 1988 இல் விற்கப்பட்ட 2,091 இலட்சம் கிலோக்கிறாம்களுடன் ஒப்பிடுகையில், 1989 இல் 1,936 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 7.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1989 இல் கொழும்பு ஏலங்களில் தேயிலை விலைகள் குறிப்பிடத்தக்களவில் வலுவடைந்தன. கொழும்பு ஏலங்களில் தேயிலையின் சராசரி மொத்த விலை முன்னைய ஆண்டின் கிலோக்கிறாமொன்றிற்கான ரூ. 54.61 உடன் ஒப்பிடுகையில் 28 சதவீதத்தினால் அதிகரித்தன. 1989 இன் முதல் இரண்டு மாதகாலப் பகுதியில் கொழும்பு ஏலங்களில் சராசரி விலைகள் ரூ. 42.71 ஆக அமைந்து, 1988 இன் தொடர்பான மாதங்களின் சராசரி விலைகளைவிடக் குறைவாக இருந்தன. எனினும் 1989 மாச்சிலிருந்து விலைகள் உச்ச உற்பத்தியைக் கொண்ட மாதங்களான யூனிலும், யூலையிலும் சிறிய தளம்பல்களுடன் மேல்நோக்கிய போக்கினைக் கொண்டிருந்தன. எனினும், செத்தெம்பரிலிருந்து விலைகளில் குறிப்பிடத்தக்க உயர்வு காணப்பட்டதுடன், ஒத்தோபர் இறுதியில் கொழும்பு ஏலத்தில் மொத்த விலைகள் கிலோக்கிறாம் ஒன்றிற்கு ரூ. 72.12 இனை அடைந்தன.

குறைவடைந்த உலக நிரம்பல், இந்தியாவினால் உள்நாட்டுச் சந்தைக்கு அதிகரித்த தேயிலை திருப்பப்பட்டமை என்பன விலை அதிகரிப்பிற்கு உதவிய முக்கிய காரணிகளுள் சிலவாகும். இதேவேளையில் செர்ணோபில் பேரழிவினைத் தொடர்ந்து சோவியத் சமவுடமைக் குடியரசு ஒன்றியத்தின் பயிரிடல் வீழ்ச்சியுற்றமையின் காரணமாக அதன் கொள்வனவுகள் அதிகரித்தமையும் கொழும்பு ஏலங்களில் தேயிலைக்கான கேள்வி வலுவடைய உதவியது. அத்துடன் செலாவணிவீதத் தேய்வும் கொழும்பு ஏலங்களில் ரூபா நியதிகளில் விலைகளை அதிகரிப்பதற்கு உதவியது. சிறந்த விலைகளின் விளைவாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் உற்பத்தியாளர் இலாபம் 1988 இன் கிலோக்கிறாம் ஒன்றிற்கான எதிர்க்கணிய இலாபமான ரூ. 6.90 இலிருந்து 1989 இல் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 0.57 கொண்ட நேர்க்கணிய இலாபத்திற்கு முன்னேற்றமடைந்தவேளையில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியாளர் இலாபமும் 1988 இன் கிலோக்கிறாமொன்றிற்கான எதிர்க்கணிய இலாபமான ரூ. 2.17 இலிருந்து 1989 இல் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 3.15 கொண்ட நேர்க்கணிய இலாபத்திற்கு அதிகரித்தது.

1989 இல் இறப்பர் உற்பத்தி 1.107 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பரவலான உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாகத் தொழிற்சாலைகள் பல சேதமாக்கப்பட்டமை, வழமையான பால் எடுக்கும் தொழிற்பாடுகள் தடைப்பட்டமை என்பன இறப்பர்உற்பத்தி தாழ்வுற்றமைக்கு ஏதுவான முக்கிய காரணிகளாகும். 1989இன் முதற் காலாண்டில் நிலவிய வரண்ட காலநிலையும் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் முக்கிய இறப்பர் வளரும் பிரதேசங்களில் ஏற்பட்ட பெரும் பருவக் காற்று மழையும் வெள்ளமும் குறைவான உற்பத்திச் செயலாற்றத்திற்குப் பொறுப்பாக இருந்த ஏனைய காரணிகளாகும். வெளியீட்டு வகைகளின் நியதிகளில், உற்பத்தியில் வீழ்ச்சி கிறேப் இறப்பரில் மிகக் கூடுதலாகச் செறிந்து காணப்பட்டதுடன் இதன் அளவு 1989 இல் 375 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் தட்டை இறப்பரின் வெளியீடு 543 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மாறாக, தொழில் நுட்பரீதியில் பாகுபடுத்தப்பட்ட இறப்பரின் உற்பத்தி 1989 இல் 189 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 5 சதவீதத்தினால் அதிகரித்தது.

1989 இல் இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி அரசதுறைப் பெருந்தோட்டங்களிலேயே மிகக் கூடுதலாகக் காணப்பட்டது. மொத்த இறப்பர் உற்பத்தியில் ஏறத்தாள 31 சதவீதத்திற்கு வகைகூறிய இரு அரசதுறைக் கூட்டுத்தாபனங்களான மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் இறப்பர் உற்பத்தி (வாங்கப்பட்ட லேட்டெக்ஸ் மூலம் தயாரிக்கப்பட்ட இறப்பர் உட்பட) முன்னைய ஆண்டின் உற்பத்தியைவிட 1989 இல் 14 சதவீதம் குறைவாக இருந்தது. அதேவேளை 1989 இல் தனியார்துறையின் இறப்பர் உற்பத்தி 760 இலட்சம் கிலோக்கிறாம்கள் என மதிப்பிடப்பட்டதுடன் 1988 இல் அறிவிக்கப்பட்ட உற்பத்தியிலும் பார்க்க 7 சதவீதம் குறைவானதாகவும் இருந்தது.

இறப்பரின் உற்பத்திச் செலவு அரசதுறை, தனியார்துறை பெருந்தோட்டங்கள் இரண்டிலும் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. இது உயர்ந்த கூலிச் செலவு, தாழ்ந்த விளைச்சல் என்பவற்றின் வெளிப்பாடாகும். மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபையின் உற்பத்திச் செலவு 1989 இல் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 29.25 இற்கு 18 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திச் செலவு கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 26.71 ஆக 16 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 1989 இல் தனியார்துறையின் உற்பத்திச் செலவு கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 15.01 இற்கு 12 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இறப்பர்துறை குறைவடைந்த வெளியீட்டுப் பிரச்சினைகள் மட்டுமன்றி, 1989 இல் குறைந்த விலைகளினால் தோன்றிய பிரச்சினைகளையும் எதிர்த்துச் சமாளிக்கவேண்டியிருந்தது. அனைத்துவகை இறப்பரினதும் சராசரி ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலை 1989 இல் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 36.17 ஆக 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. விலைகளில் ஏற்பட்ட கீழ்நோக்கிய போக்கிற்கு, மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற முக்கிய இறப்பர் உற்பத்தி நாடுகளின் அதிகரித்த உற்பத்தியைத் தொடர்ந்து ஏற்பட்ட உயர்வான உலக நிரம்பல்களே முக்கிய காரணமாக இருந்தன. கொழும்பு ஏலங்களில் ஆர்.எஸ்.எஸ். 1இன் சராசரி விலை கிலோக்கிறாம் ஒன்றிற்கு ரூ. 22.63 இற்கு 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் ஆர்.எஸ்.எஸ். 2 இன் சராசரி விலை முன்னைய ஆண்டினை விடக் கிலோக்கிறாமிற்கு ரூ. 21.77 இற்கு 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. லேட்டெக்ஸ் கிறேப் 1 இன் விலையும் 1989 இல் கிலோக்கிறாமிற்கு ரூ. 29.42 இற்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபையின் உற்பத்தியாளர் இலாபம் 1988 இன் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 3.00 கொண்ட நேர்க்கணிய இலாபத்திலிருந்து 1989 இல் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 1.25 கொண்ட எதிர்க்கணிய இலாபத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியாளர் இலாபமும் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 3.45 இலிருந்து கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 1.14 கொண்ட எதிர்க்கணிய இலாபத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

பெரும்பாலான முக்கிய வேளாண்மைப் பயிர்கள் வெளியீட்டில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த வேளையில் தெங்கு உற்பத்தி மட்டும் 1989 இல் 24,860 இலட்சம் காய்களுக்கு அதிகரித்து 28 சதவீதங் கொண்ட கணிசமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இதற்கு முன்னைய ஆண்டில் நிலவிய திருந்திய மழைவீழ்ச்சியின் காலங்கடந்த தாக்கமே மிகப் பெருமளவிற்குக் காரணமாக இருந்தது. எனினும் 1989 இன் உற்பத்தி 1986 இல் பதிவு செய்யப்பட்ட உச்சமட்ட உற்பத்தியான 30.390 இலட்சம் காய்களைவிடக் கணிசமானளவிற்குக் குறைவானதாகும்.

காய்களின் அதிகரித்த நிரம்பலைத் தொடர்ந்து மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளான——தேங்காய்த்துருவல் தேங்காயெண்ணெய், உலர்த்திய தேங்காய் என்பனவற்றின் உற்பத்தி 1989 இல் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தது. தேங்காய்த்துருவல், தேங்காயெண்ணெய் என்பனவற்றின் உற்பத்தி இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்த வேளையில் உலர்த்திய தேங்காயின் ஏற்றுமதி அளவு 41 சதவீதங் கொண்ட கணிசமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. உடன் காய்களின் ஏற்றுமதி அளவும் 10 இலட்சத்தினால்

அதிகரித்தது. பொதுவாக, பெரும்பாலான ஏனைய பயிர்த்துறைகளைக் கடுமை யாகப் பாதித்த நாட்டின் அமைதியற்ற நிலைமைகள் தெங்கு உற்பத்தியின்மீது மிகச் சிறிதளவு பாதகமான தாக்கத்தினை மட்டும் கொண்டிருந்தனபோல் தோன்றுகின்றது.

உற்பத்தி மீட்சிபெற்றமையைத் தொடர்ந்து நிரம்பல் அதிகரித்தமையின் விளைவாக 1989 இல் உள்நாட்டுச் சந்தையில் காயின் விலைகள் வீழ்ச்சி யடைந்தன. சராசரி ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலையும் 1988 இல் காயொன்றிற் கான ரூ. 4 இலிருந்து 1989 இல் காயொன்றிற்கு ரூ. 3.35 இற்கு வீழ்ச்சி யடைந்தது. முக்கிய தெங்கு உற்பத்தி நாடுகளின் முன்னேற்றமான நிரம்பல் நிலைமை, மந்தமான கேள்வி, பதிலீடுகளின் அதிகளவு கிடைப்பனவுத்தன்மை என்பனவற்றிற்கு இசைவாகப் பன்னாட்டுச் சந்தையில் அனைத்து மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளினதும் விலைகள் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன.

1988இல் 16 சதவீதங் கொண்ட மெச்சத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்த நெல் உற்பத்தி 1989 இல் மிகக் கடுமையான பின்னடைவிற்குட்பட்டது. 1989 இல் 20.6 இலட்சம் மெற்றிக் தொன்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப் பட்ட நெல் உற்பத்தி 1979 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட மிகக் குறைந்த உற்பத்தி மட்டமாக விளங்கியதுடன், முன்னைய ஆண்டின் உற்பத்தியினைவிட 17 சதவீதங் கொண்ட வீழ்ச்சியையும் காட்டியது. 1989 இன் நெல் உற்பத்தி இலக்கிடப்பட்ட உற்பத்தி மட்டத்தில் 70 சதவீதம் வரையிலேயே இருந்ததாக அளவிடப்பட்டுள்ளது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி 1988/89 பெரும்போகம் 1989 சிறுபோகம் ஆகிய இரு பருவங்களிலும் பிரதிபலித்ததுடன் இதற்கு விதைக்கப்பட்ட, அறுவடை செய்யப்பட்ட பரப்புக்கள் கணிசமானளவில் குறை வடைந்தமையும் முக்கிய நெல் உற்பத்திப் பிரதேசங்களில் நிலவிய வரட்சி நிலைமைகளின் முக்கிய காரணமாகக் குறைவான தாழ்ந்த விளைச்சலுமே பெருமளவிற்குக் காரணங்களாகும்.

விரையங்களுக்கும், விதை நெல் தேவைகளுக்கும் சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் மொத்த நெல் உற்பத்திக்குச் சமமான அரிசிக்குச் சமமாக நுகர்வுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி 1989 இல் 12.3 இலட்சம் மெற்றிக் தொன்களாகக் காணப்பட்டது. இது முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட 88 சதவீதத்திற்கெதிராக மொத்த உள்நாட்டு அரிசித் தேவையில் ஏறத்தாள 73 சதவீதத்தினை மட்டுமே வழங்கியது. உள்நாட்டு மூலங்களிலிருந்தான குறைவடைந்த கிடைப்பனவுகளின் பின்னணியில் இவ்வாண் டில் நாட்டின் அரிசித் தேவைப்பாடுகளை அதிகரித்த இறக்குமதி மூலமாகவே ஈடுசெய்யவேண்டியிருந்தது. 1989 இல் அரிசி இறக்குமதியின் அளவு முன்னைய ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 210,000 மெற்றிக் தொன்களுடன் ஒப் பிடுகையில் 316,000 மெற்றிக் தொன்களாக விளங்கின.

1989 இல் நெல்துறையில் காணப்பட்ட இன்னொரு மிகக் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாதெனில் நெல் சந்தைப்படுத்தும் சபையின் தொழிற்பாடுகள் கடுமையாகக் குறைவடைந்தமையேயாகும். உத்தரவாத விலைத் திட்டங்களின் கீழ் நெற்சந்தைப்படுத்தும் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நெற் கொள்வனவு கள் 1988 இன் 105,000 மெற்றிக் தொன்களிலிருந்து 5,036 மெற்றிக் தொன் களுக்குக் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தன. உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் இதற்கு முன் கொள்வனவு செய்யப்பட்ட மட்டங்களில் இதுவே மிகக் குறைந்த

மட்டமாக இருந்ததுடன் இதற்குக் குறைந்த நெல் உற்பத்தி, உயர்ந்த திறந்த சந்தைவிலைகள், நெல் சந்தைப்படுத்தும் சபையின் கொள்வனவு நடவடிக்கை களைக் கடுமையாகப் பாதித்த குழப்ப நிலைமைகள் என்பனவே முக்கிய காரணங் களாகும். 1989 இல் நெல்லின் உத்தரவாத விலை புசலுக்கு ரூ. 80 ஆக மாற்றமின்றியிருந்தது.

1988 இல் 53,521 மெற்றிக் தொன்களுக்கு 83 சதவீதத்தினால் குறிப் பிடத்தக்களவில் அதிகரித்த சீனி உற்பத்தி 1989 இல் 53,983 மெற்றிக் தொன் களுக்கு அதிகரித்து ஏறத்தாழ 1 சதவீதங் கொண்ட சிறிதளவு முன்னேற்றத்தினை மட்டுமே பதிவு செய்தது. இங்குரானவிலும், கந்தளாயிலுமுள்ள தொழிற்சாலை கள் உற்பத்தியின் முழு அதிகரிப்பிற்கும் வகை கூறின. இங்குரான தொழிற்சாலை யின் சீனி உற்பத்தி தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக 1989 இல் 14,250 மெற்றிக் தொன்களுக்கு 29 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் கந்தளாய் தொழிற்சாலையின் சீனி உற்பத்தி 2,305 மெற்றிக் தொன்களுக்கு 62 சத வீதத்தினால் உயர்வடைந்தது. அதேவேளை செவனகல தொழிற்சாலையின் சீனி உற்பத்தி 9,078 மெற்றிக் தொன்களுக்கு 18 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்தவேளையில் பெல்வத்தைச் சீனிக் கூட்டு நிலையத்தின் சீனி உற்பத்தி 1989 இல் 28,350 மெற்றிக் தொன்களுக்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இரண்டு தொழிற்சாலைகளினதும் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு, வழமை யான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளைப் பாதித்ததுடன் வேலை நிறுத்தங் களுக்கும் காரணமாயிருந்த உள்நாட்டுக் குழப்பங்களின் விளைவாக அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு குறைவடைந்தமை, இதேபோன்று சராசரி விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன காரணங்களாகும்.

ஏற்றுமதித் தரவுகளின் அடிப்படையில், கறுவா, முந்திரிப் பருப்பு தவிர்ந்த அனைத்து முக்கிய சிறு ஏற்றுமதிப் பயிர்களினதும் உற்பத்தி 1989 இல் மிகக் கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்தது. மிளகு, கராம்பு, கோப்பி என்பனவற்றின் ஏற்றுமதி அளவு முறையே 41 சதவீதத்தினாலும், 86 சத வீதத்தினாலும், 57 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. குறைவடைந்த ஏற்றுமதி அளவுகளைப் பதிவுசெய்த பயிர்களிடையே கொக்கோ (10 சதவீதம்), சாதிக்காயும், சாதிப்பத்திரியும் (20 சதவீதம்), ஏலக்காய் (9 சதவீதம்) என்பனவும் காணப்பட்டுக் குறைந்த உற்பத்திச் செயலாற்றத்தினை எடுத்துக் காட்டின. எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கறுவாவின் ஏற்றுமதி அளவு 10 சதவீதத்தினாலும், முந்திரிப் பருப்பின் ஏற்றுமதி அளவு 19 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

1989 இல் மீன் உற்பத்தி 205,286 மெற்றிக் தொன்களாகத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டைவிட 4 சதவீதங் கொண்ட தொரு அதிகரிப்பாகும். 1989 இல் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட உயர்வானது ஒரு நாள் படகுகள் பல நாள் படகுகளாக மாற்றப்பட்டமையைத் தொடர்ந்து கரை கடந்த மீன்பிடி நடவடிக்கைகள் விரிவடைந்தமையின் முக்கிய காரணமாக உற்பத்தியில் 84 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்த கரைகடந்த, ஆழ்கடல் துணைத்துறையில் பெருமளவிற்குப் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளை கரை யோர மீன்பிடித் துணைத்துறையினதும், உள்நாட்டு மீன்பிடித் துணைத்துறை யினதும் மீன் உற்பத்தி 1989 இல் சிறிதளவு அதிகரிப்புக்களை மட்டுமே பதிவு செய்தது. குடிமதிப்பு, புள்ளி விபரவியல் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி 1989 இல் பால் உற்பத்தி (எருமைப்பால் உட்பட) 2,380 இலட்சம் லீற்றர்

களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 6 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியவேளையில் மொத்த முட்டை உற்பத்தி 8,340 இலட்சமாக மதிப்பிடப் பட்டு, முன்னைய ஆண்டினைவிட 7 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது.

வேளாண்மைத்துறைக்கு மாறாக, தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பங் களுக்கு மத்தியில் உற்பத்தியிலும், பகிர்ந்தளிப்பிலும் தடங்கல்கள் ஏற்பட்ட போதும் 1989 இல் கைத்தொழில்துறை அதன் வளர்ச்சி வேகத்தைப் பேணக் கூடியதாக இருந்தது. இதன்படி 1988 இல் உண்மை நியதிகளில் 6 சதவீதத் தினால் அதிகரித்த கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி, 1989 இல் மேலும் 6 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் இவ்வளர்ச்சி முழுவதும் தனியார் துறைக் கைத்தொழிலிலிருந்தே கிடைத்ததுடன் இது எத்தன்மைத்தான தாக்கங் களையும் எதிர்த்து நிற்கக்கூடிய எதிர்ப்பாற்றலையும் இயலளவையும் எடுத்துக் காட்டியது. 1989 இல் தனியார்துறைக் கைத்தொழிலின் வெளியீடு 15 சத வீதத்தினால் உயர்வடைந்தது. மாறாக உள்நாட்டுக் குழப்பங்களின்காரணமாகக் தோன்றிய தாக்கங்களினால் அரசதுறை இலகுவில் ஆற்றலிழந்ததுடன் அதன் வெளியீடும் இவ்வாண்டில் 21 சதவீதத்தினால் மிகக் கூடியளவில் வீழ்ச்சியடைந் தது. அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீட்டுப் பெறுமதி வீழ்ச்சியடைந்த தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டாக இது விளங்குகிறது.

1989 இல் உற்பத்தி அதிகரிப்புக்களைப் பதிவு செய்த கைத்தொழில் துணைத் துறைகளாக உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (17 சதவீதம்), புடவைகள், ஆணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் (16 சதவீதம்), உணவு, குடிபானம், புகையிலை (12 சதவீதம்) என்பன காணப்பட்டன. மறுபுறத்தில் வெளியீட்டில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த கைத்தொழில் துணைத்துறைகளாகத் தாள், தாள் உற்பத்திகள் (20 சதவீதம்), இரசாயனமும் பெற்றோலியமும், பிளாத்திக்கு உற்பத்திகள் (18 சதவீதம்), அடிப்படை உலோக உற்பத்திகள் (11 சதவீதம்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (5 சதவீதம்) ஆகியன காணப்பட்டன.

புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் வகையின் திருந்திய செயலாற்றத்திற்கு முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு உள்ளேயும், வெளியேயு மான தைக்கப்பட்ட ஆடை உற்பத்தி வெளியீட்டின் கணிசமான அதிகரிப்புக்களே முதன்மைக் காரணியாக விளங்கியது. உணவு, குடிபானமும், புகையிலையும் வகையில் புகையிலை, பால் உற்பத்திகள், மா, இனிப்பு வகைகள், இறைச்சி உற்பத்திகள் போன்ற பல உற்பத்திகளின் வெளியீட்டில் காணப்பட்ட அதிகரிப் பின் பெருமளவு காரணமாகத் தனியார்துறைக் கைத்தொழில்கள் மிகச் சிறந்த செயலாற்றத்தினைக் காட்டின. தனியார்துறையில் இரசாயனம், பெற்றோலிய, பிளாத்திக்கு உற்டத்திகள் வகை அதிகரித்த உற்பத்தி வெளியீடுகளைப் பதிவு செய்தபோதிலும் பேணல் நோக்கங்களுக்காகத் தூய்மி மூடப்பட்டமையைத் தொடர்ந்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியில் கடுமை யான குறைப்புக் காணப்பட்டமையால் இத்துறையில் பொதுவாக உற்பத்தி வெளியீடு வீழ்ச்சியடைந்தது. மரத்துண்டுகள், மர உற்பத்திப் பொருட்கள் வகையில் உற்பத்தி வெளியீட்டின் வீழ்ச்சி தனியார்துறையின் அதிகரித்த உற்பத்தி வெளியீட்டை முழுமையாகவே இல்லாமல் செய்த இலங்கை ஒட்டுப்பலகை, அரச மரக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் குறைவான உற்பத்தி வெளியீட்டு மட்டங்களின் காரணமாக ஏற்பட்டதாகும்.

1989 இல் அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் உற்பத்தி வெளியீட்டின் கடுமையான குறைப்பு இலங்கைப் பெற்றோலியம், தேசிய புடவை, இலங்கைச் சீமெந்து, இலங்கை உருக்கு, தேசிய தாள், இலங்கை எண்ணெய் கொழுப்பு, இலங்கை ரயர், இலங்கை ஒட்டுப்பலகை, அரச மரம், அரச அகழ்வு, கனிப் பொருள் அபிவிருத்தி, இலங்கை தோற் பொருட்கள், இலங்கை உலோகம் ஆகிய பல முக்கிய அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் உற்பத்திக்குறைப்பின் விளைவாகும். மின் வழங்கலில் ஏற்படுத்தப்பட்ட தடைகள், ஊழியர்கள் வேலைக்கு வராமை, உற்பத்திக்கும் பகிர்ந்தளிப்புக்குமான தடங்கல்கள் போன்றன இவ்வரசதுறைக் கைத்தொழில்களின் மோசமான செயலாற்றத்துக்கான முக்கிய ஏதுக் காரணிகளாக விளங்கின. இவ்வாண்டில் உற்பத்தி அதிகரிப்புக்களைப் பதிவு செய்த கூட்டுத்தாபனங்களாக இலங்கைக் கனிப்பொருள் மணல் (47 சதவீதம்), தேசிய உப்பு (41 சதவீதம்), அரச வடிசாலைகள் (12 சதவீதம்), இலங்கைச் சீனி (7 சதவீதம்), இலங்கை மட்பாண்டம் (4 சதவீதம்) என்பன விளங்கின.

1988 இன் ரூ. 5,230 இலட்சத்துடன் ஒப்பிடுகையில், 1989 இல் அரச துறைக் கைத்தொழில் முயற்சிகளுக்கான வரவு செலவுத்திட்ட மாற்றல்கள் ரூ. 3,800 இலட்சமாக விளங்கின. 1989 இல் செய்யப்பட்ட மாற்றல்களில் ரூ. 2,310 இலட்சம் (61 சதவீதம்), நடைமுறை மாற்றல்களாகக் காணப்பட்ட வேளையில் மிகுதி ரூ. 1,490 இலட்சம் (39 சதவீதம்) மூலதன மாற்றல்களாகக் காணப்பட்டது. 1989 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வரவு செலவுத்திட்ட மாற்றல்களில் பெரிய பங்கினை (87 சதவீதம்) தொடர்ச்சியான ஐந்தாவது ஆண்டாக இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் பெற்றுக் கொண்டது. 1989 இல் வரவு செலவுத்திட்ட மாற்றல்களைப் பெற்றுக்கொண்ட ஏனைய கூட்டுத்தாபனங்களாக அரச வன்கலம், தேசிய புடவை, இலங்கை எண்ணெய் கொழுப்பு என்பன விளங்கின.

உறுதியற்ற நிலைமைகளுக்கு மத்தியிலும் கைத்தொழில் துறையில் முதலீட்டு நடவடிக்கைகள் முன்னைய ஆண்டுகளைவிட மெதுவாக, ஆனால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. 1988 இல் ஒப்புதலளிக்கப்பட்ட 31 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 1989 இல் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு 24 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. 1989 இறுதியில் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 308 ஆக விளங்கியது. இவ்வொப்புதல்களில் 178 செயற்றிட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் 1989 இறுதியில் கைச்சாத்திடப்பட்டிருந்தன. இவற்றில் 118 வர்த்தக உற்பத்தியில் காணப்பட்டன. 1989 இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் முதலீட்டு உள்ளார்ந்த வளம் ரூ. 19,810 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதே வேளையில் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவிற்கு வெளியேயான வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு, வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு (வெ.மு.ம.கு.) 1989 இல் 62 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச்செயற்றிட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட முதலீடு ரூ. 13,700 இலட்சமாக விளங்கியதுடன் இதில் ரூ. 6,050 இலட்சம் அல்லது 44 சதவீதம் வெளிநாட்டு முதலீடுகளை உள்ளடக்கியிருந்தது.

1989ஆம் ஆண்டினை முழுமையாக நோக்குகையில், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விலை அதிகரிப்பின் சராசரி வீதத்தில் சிறிதளவு மிதமான தன்மை காணப்பட்டது. 1988 இன் 14.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 11.6 சதவீத ஆண்டுச் சராசரி அதிகரிப்பினைப் பதிவு செய்தது. எனினும், விலை அதிகரிப்பு வீதத்தின் இந்த மிதமான தன்மை ஆண்டின் முதற் சில மாதங்களிலேயே பெருமளவு செறிந்து காணப்பட்டது. 1989 இன் இரண்டாம் அரைப் பகுதியில் விலை அதிகரிப்பு அதிவேகமானதாக இருந்தது. இதன் விளைவாக ஆண்டின் இறுதியில் (1988 திசெம்பரைவிட 1989 திசெம்பரில்) விலைச் சுட்டெண்ணின் புள்ளிக்குப்புள்ளி அதிகரிப்பு முன்னைய ஆண்டின் கிட்டத்தட்ட இதே வீதமான 15.1 சதவீதத்தில் காணப்பட்டது. முதலாந்தர மட்டத்திலும்கூட மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச்சராசரி 1988 இன் 17.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் 9 சதவீதத்தினால் அதிகரித்து, விலைகளின் நடத்தையில் இதே மாதிரியான போக்கினைக் கொண்டிருந்தது. இவ்வாறிருக்கையில் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் (1988 திசெம்பரைவிட 1989 திசெம்பரில்) 1989 இன் இறுதி மாதங்களில் அதிகூடிய விலை அழுத்தத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் சுட்டெண் 18.4 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

1989 இன் முதற் காலாண்டில் பாதுகாப்பு நிலைமையின் தற்காலிக முன்னேற்றமானது இக்காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட விலைகளின் மிதமான தன்மைக்கு காரணமாகியது. 1989 இன் முதல் இரு மாதங்களிலும் கொ.நு.வி. சுட்டெண் உண்மையிலேயே வீழ்ச்சியடைந்தது. எனினும் இரண்டாம் காலாண்டிலிருந்து மென்மேலும் மோசமடைந்த பாதுகாப்பு நிலைமை உற்பத்தி, வர்த்தகம், போக்குவரத்து என்பனவற்றில் தடங்கலை ஏற்படுத்தி, பற்றாக்குறை, விலை அதிகரிப்பு என்பனவற்றை விளைவித்தது. சில வேளாண்மைப் பொருட்களின் நிரம்பலில் பற்றாக்குறையை ஏற்படுத்திய வரட்சி நிலைமைகளும், உயர்ந்த பன்னாட்டு விலைகள், செலாவணிவீத மாறுபாடுகள் ஆகிய இரண்டினாலும் இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய உணவுப் பொருட்களின் விலைகளின் அதிகரிப்பும் பெற்றோலியத்தின் விலைகள் மீளாய்வு செய்யப்பட்டமையும் மா, பாண் போன்றவற்றின் நிருவகிக்கப்பட்ட விலைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டமையும், 1989 இறுதிப் பாகத்தில் பொதுவான விலை மட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்திய ஏனைய காரணிகளாகக் காணப்பட்டன. எனினும் 1989 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட உறுதிப்படுத்தும் கொள்கைகள் பேரண்ட உறுதிப்பாட்டைக் கொண்டுவருவதில் பெருமளவு வெற்றி கண்டதோடு இது கேள்விப் பக்கத்திலிருந்து தோன்றிய விலைகளின் தாக்கத்தினை இலகுவாக்குவதற்கும் உதவியது. பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி எய்தப்பெறாவிடில் 1989 இல் விலை அபிவிருத்திகள் மிக மோசமானதாகக் காணப்பட்டிருந்திருக்கும். பொருளாதாரத்தில் விலை உறுதிப்பாட்டைப் பேணுவதில் அதிகாரிகளுக்குள்ள தொடர்ச்சியான பொறுப்பினை இது பிரதிபலிப்பதாக உள்ளது.

1989 இல் விலை அழுத்தம் பரவலான ரீதியில் பிரதிபலிக்கப்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் உணவுக்கான துணைச் சுட்டெண் சராசரியாக 10.3 சதவீதத்தினால் அதிகரித்துச் சுட்டெண்ணின் பொதுவான அதிகரிப்பின் 62 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. 1988 இன் 4.7 சத வீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் புடவை விலைகள் 16.7 சத வீதத்தி னால் வெகுவாக அதிகரித்தன. எரிபொருளினதும், வெளிச்ச விடயங்களின தும் விலைகள் முன்னைய ஆண்டின் 13 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 12.0 சத வீதத்தினால் அதிகரித்தன. பல்வகைத் தொகுதியின் துணைச் சுட்டெண் 1988 இல் பதிவு செய்யப்பட்ட 14.1 சதவீதத்தை மீறி 15.8 சத வீதத் தினால் உயர்வடைந்தது.

மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (மொ.வி.வி.சு.) முதலாந்தரச் சந்தை மட்டத்தில் விலை அசைவுகளை அளவிடுகின்றது. மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி 1988 இன் 17.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1989 இல் 9.0 சதவீதத்தினால் அதிகரித்தது. புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் (1988 திசெம்பரை விட 1989 திசெம்பர்) 1988 இல் பதிவு செய்யப்பட்ட 9.3 சதவீதத்தினை அதிகளவில் விஞ்சும் வகையில் 18.4 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைப் போலவே மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணினது அதிகரிப்பும் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியிலேயே பெரும்பாலும் செறிந்து காணப்பட்டது. தேயிலையின் ஏற்றுமதி விலை உறுதிப்படுத்தப்பட்டமை 1989 இன் பிற்பகுதியில் சுட்டெண்ணை மேல்நோக்கிச் செலுத்திய முக்கிய காரணியாக விளங்கியது.

1989 இல் அரச ஊழியர்களின் கூலி அமைப்பில் முக்கிய மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை. அரசதுறையின் ஊழியர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வாழ்க்கைச் செலவுப்படிக் கொடுப்பனவு 1988 யூலை மட்டத்திலேயே தொடர்ந்தும் நிலைப்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, கூலி வீதச் சுட்டெண் ணினால் அளவிடப்பட்டவாறான அரச ஊழியர்களின் சராசரிப் பெயரளவு கூலி மட்டங்கள் 8.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தபோதிலும், 1989 இல் அவர் களின் உண்மைக் கூலிகள் 2.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. நன்கமைந்த தனியார்துறையில் கூலி நிர்ணய சபையினால் உள்ளடக்கப்பட்ட வர்த்தகங்களில் உள்ள தொழிலாளர்களின் ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண்ணினால் அறவிடப்பட்டவாறான பெயரளவுக் கூலிகள் 15.6 சதவீதத்தினால் அதிகரித்த துடன் அவர்களது உண்மைக் கூலிகள் 3.8 சதவீதத்தினால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்காலிகத் தரவுகளின்படி 1989 இல் அரசதுறை, தனியார்துறை இரண் டிலும் தொழில்நிலை மிதமாக அதிகரித்துள்ளது. அரசதுறையினுள் அரச நிறு வனங்களின் தொழில்நிலை அதிகரித்த வேளையில் அரசுசார் நிறுவனங்களினது தொழில்நிலை சிறிதளவால் குறைவடைந்தது. 1989 இல் அரச அமைச்சுக் களினதும் நிறுவனங்களினதும் அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கும் அரச நிறுவனங்களின் தொழில்நிலை 9.9 சதவீதத்தினால் 588,500 இற்கு அதிகரித் துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 749,700 ஆக விளங்கிய அரசுசார் நிறுவனங்களின் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை முன்னைய ஆண்டின் மட்டத்திலிருந்து சிறிதளவு குறைப்பினைப் பதிவு செய்துள்ளது. 1989 இல் தனியார்துறையில் தொழில்நிலையின் மாற்றங்கள் தொடர்பான நம்பத்தகுந்த தகவல்கள் கிடைக்கத்தக்கதாகவில்லை. எனினும் கொழும்புப் பெரும்பாகப்

பொருளாதார ஆணைக்குழுவின் கீழ்த் தொழிற்படும் தொழில் முயற்சிகளில் 12.5 சதவீத அதிகரிப்பொன்று காணப்பட்டதோடு, 1989 இறுதியில் அவற்றின் தொழில்நிலை 61,429 பேர்கள் மட்டத்தினை அடைந்தது. இதேவேளையில் 1989 இல் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் தொழில் ஆற்றலை ஈர்க்கும் இயலளவு 4,999 ஆகக் காணப்பட்டது. 1989 இறுதி வரையிலான வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவின் தொழில் ஈர்ப்பில் 53,697 பேர் (64 சதவீதம்) தயாரிப்புக் கைத் தொழில்களில் காணப்பட்டனர்.

1989 இல் அரசதுறையில் தொழில் வாய்ப்புக்களின் வளர்ச்சி ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டுள்ளது. நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் விதந்துரைப்புக்களைத் தொடர்ந்து அரச பணிகளை மீளமைப்புச் செய்வதற்கும் முறைப்படுத்துவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டமையே இதற் கான முக்கிய காரணமாக விளங்கியது. அண்மிய எதிர்காலத்தில் இத்துறையில் மேலதிகத் தொழில்வாய்ப்புகளை உருவாக்கும் இயலளவு மேலும் மட்டுப்படுத்தப் படும் என்ற கருத்தையும் இது தருவதாகவுள்ளது. இது இவ்வாறிருப்பதனால் வளர்ந்துவரும் தொழில்வாய்ப்பின்மையைச் சமாளிப்பதற்கும் அது சமூகத்தின் பெரும் அமைதியின்மைக்கு மூலமாக அமைவதைத் தடுக்கும் பொருட்டும், தனி யார்துறையிலும் சுயதொழில் துறையிலும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கு வதில் கணிசமான முன்னேற்றத்தினைக் காணவேண்டியுள்ளது. இனிவரும் ஆண்டு களில் தொழிற்படையில் சேரும் அதிகரித்த எண்ணிக்கையை ஈர்க்கும் வகையில் இத்துறைகளில் பொருத்தமான நிலைமைகளை உருவாக்க வேண்டியதன் அவசி யத்தையும் இது குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்துறையின் அபிவிருத்திகள் 1989 இல் முன்னைய ஆண்டைவிடச் சார்புரீதியில் சாதகமற்ற தன்மையைக் குறைவாகவே கொண்டிருந்தன. வணிக ஏற்றுமதிகளின் பெறுமதி 1988 இன் 2 சதவீதத்திற்கும் குறைவான சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 11 சதவீதத்தினால் சிஎஉ 12,160 இலட்சத்திற்கு (ரூ. 561,750 இலட்சம்) விரிவடைந்தது. மறுபுறத்தில் இறக்குமதிகளின் மீதான செலவு 5 சதவீதத்தினால் மட்டும் சிஎஉ 17,370 இலட்சத்திற்கு (ரூ. 802,250 இலட்சம்) அதிகரித்தது. இவ்வதிகரிப்பு முன்னைய ஆண்டின் இதேவீத அதிகரிப்பினை ஒத்ததாகும். இதன் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறை, முன்னைய ஆண்டின் பற்றாக்குறையான சிஎஉ 5,640 இலட் சத்துடன் ஒப்பிடுகையில் (ரூ. 241,020 இலட்சம்) 1989 இல் 8 சதவீதத்தினால் சிஎஉ5, 210 இலட்சத்திற்கு (ரூ. 240,500 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. இதே வேளையில் இறக்குமதிக் கொடுப்பனவுகளின் விகிதமாக ஏற்றுமதி வருவாய்கள் 1988 இன் 66 சதவீதத்திலிருந்து 1989 இல் பாராட்டத்தக்க வகையில் 70 சதவீதத்திற்கு அதிகரித்தன. எனினும், மறுபுறத்தில் இலங்கையின் ஏற்றுமதி களினதும், இறக்குமதிகளினதும் விலை அசைவுகள் தொடர்ந்தும் சாதகமற்ற தாகவே காணப்பட்டன. சராசரி ஏற்றுமதி விலைச் சுட்டெண் 11 சதவீதத் தினால் உயர்வடைந்த வேளையில், சராசரி இறக்குமதி விலைச் சுட்டெண் 18 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இதன் விளைவாக முன்னைய ஆண்டின் 7 சதவீத வர்த்தக மாற்று விகித இழப்புக்கு மேலாக, 1989 இல் வர்த்தக மாற்று விகிதம் 6 சதவீதத்தினால் மோசமடைந்தது.

1989 இல் ஏற்றுமதிகளின் உயர்ந்த வளர்ச்சிக்குத் தேயிலை, தெங்கு, புடவையும் அணியும் ஆடைகளும், ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் என்பன வற்றின் அதிகரித்த வருவாய்களே முக்கிய காரணமாகின. இவ்வேற்றுமதிகளி லிருந்தான அதிகரித்த வருவாய்கள் ஏனைய ஏற்றுமதிகளான இறப்பர், சிறு வேளாண்மை உற்பத்திகள், பெற்றோலிய ஏற்றுமதிகள் என்பனவற்றிலிருந்தான குறைப்புக்களை எதிரீடு செய்வதற்குத் தேவைக்கும் அதிகமாகக் காணப்பட்டன. இறக்குமதியைப் பொறுத்தவரை 1989 இல் இறக்குமதிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்புக்கு நுகர்வுப் பொருட்களினதும் இடைநிலைப் பொருட்களினதும்மீதான அதிகரித்த செலவுகளே முழுக் காரணியாக அமைந்தன. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவு 11 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில், இடை நிலைப் பொருட்களினது செலவு 4 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

சுங்கப் பகுதியின் தரவுகளின்படி, ஏற்றுமதிகளின் பெறுமதி 1988 இன் சிஎஉ 2,880 இலட்சத்திலிருந்து (ரூ. 122,990 இலட்சம்) 1989 இல் சிஎஉ 2,960 இலட்சத்திற்கு (ரூ. 136,640 இலட்சம்) 3 சதவீதத்தினால் அதிகரித்தது. கிலோக்கிறாமொன்றுக்கான சிஎஉ 1.31 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு சிஎஉ 1.45 இற்கு 11 சதவீதத்தினால் ஏற்பட்ட விலை அதிகரிப்பே இதற்கு முழுக் காரணியாக அமைந்தது. மாறாக ஏற்றுமதிகளின் தொகை 2,200 இலட்சம் கிலோக்கிறாம்களிலிருந்து 2,040 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு, 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில் இறப்பர் ஏற்றுமதி களிலிருந்தான வருவாய்கள் 1988 இன் சிஎஉ 870 இலட்சத்திலிருந்து (ரூ. 37,060 இலட்சம்) 1989 இல் சிஎஉ 670 இலட்சத்திற்கு (ரூ. 31,120 இலட்சம்) 23 சதவீதத்தினால் கடுமையாக வீழ்ச்சியுற்றது. வருவாய்களின் இவ்வீழ்ச்சிக்குத் தொகை, விலை ஆகிய இரண்டினதும் குறைப்புக்கள் காரணமாக அமைந்தன. இறப்பரின் ஏற்றுமதித்தொகை 990 இலட்சம் கிலோக்கிறாம்களி லிருந்து 860 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 13 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்தவேளையில் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் க.ஏ.பெ. விலை கிலோக் கிறாம் ஒன்றுக்கு சிஎஉ 0.87 இலிருந்து, கிலோக்கிறாம் ஒன்றுக்கு சிஎஉ 0.78 இற்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இறப்பருக்கு மாறாக, தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1988 இன் சிஎஉ 360 இலட்சத்திலிருந்து (ரூ. 15,380 இலட்சம்) 1989 இல் சிஎஉ 620 இலட்சத்திற்கு (ரூ. 28,650 இலட்சம்) 72 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்தன. ஏற்றுமதி யின் தொகை 2,240 இலட்சம் காய்களிலிருந்து 5,720 இலட்சம் காய்களுக்கு இரண்டு மடங்கிற்கும் மேலாக அதிகரித்தமையே இதற்கான முழுக் காரணமாக அமைந்தது. மாறாக, தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் சராசரி ஏற்றுமதி விலை காயொன்றுக்கு 1988 இன் சிஎஉ 0.09 இலிருந்து 1989 இல் காயொன்றுக்கு சிஎஉ 0.07 இற்கு 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 1988 இன் சிஎஉ 600 இலட் சத்திலிருந்து (ரூ. 25,610 இலட்சம்) 1989 இல் சிஎஉ 520 இலட்சத்திற்கு (ரூ. 24,080 இலட்சம்) 13 சதவீதத்தினால் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. இது முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 33 சதவீத அதிகரிப்புக்கு முற்றிலும் முரணானதாகக் காணப்பட்டது. இதேவேளையில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1988 இன் சிஎஉ 5,300 இலட்சத்திலிருந்து (ரூ. 226,740 இலட்சம்) 1989 இல் சிஎஉ 6,160 இலட்சத்திற்கு (ரூ. 284,700 இலட்சம்) 16 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தது. கைத் தொழில் ஏற்றுமதிகளின் இந்தக் குறிப்பிடத்தக்க வளர்ச்சி, புடவைகள் ஆடைகள் மற்றும் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளான வைரங்கள், இரசாயனங்கள்,

இறப்பர் உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான அதிகரித்த வருவாய்களின் விளைவாகும். எனினும் கனிப்பொருள் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி 1988 இன் சிஎஉ 610 இலட்சத்திலிருந்து (ரூ. 26,140 இலட்சம்) 1989 இல் சிஎஉ 580 இலட்சத்திற்கு (ரூ. 26,930 இலட்சம்) 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி இரத்தினக்கற்களினதும், ஏனைய கனிப்பொருட்களினதும் ஏற்றுமதிகளில் பிரதிபலித்தது.

இவ்வபிவிருத்திகளுடன் நாட்டின் ஏற்றுமதி உள்ளடக்கம் 1989 இல் மேலும் மாற்றங்களுக்கு உள்ளாகியது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு 1988 இன் 48 சதவீதத்திலிருந்து 1989 இல் 51 சதவீதத்திற்கு அதிகரித்தமை மிகக் குறிப்பிடத்தக்க மாற்றமாகக் காணப்பட்டதுடன், இது மொத்த ஏற்றுமதிகளில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கினை 50 சதவீத மட்டத்திற்கும் மேலாக உயர்த்தியது. இதேவேளையில் வேளாண்மை ஏற்றுமதிகளின் பங்கு இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 43 சதவீதத்திலிருந்து 39 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. கனிப்பொருள் ஏற்றுமதிகளின் பங்கும் 5.6 சதவீதத்திலிருந்து 4.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. புடவைகளும் அணியும் ஆடைகளும் வகையே ஏற்றுமதிகளின் தனிப்பெரும் வகையாக 1986 இல் அடைந்த நிலையில் தொடர்ந்தும் காணப்பட்டு 1989இன் மொத்த ஏற்றுமதிகளில் 31 சதவீதத்திற்கு வகை கூறியது. 1988 இல் ஒப்பிடத்தக்க வீதம் 30 சதவீதமாகக் காணப்பட்டது.

சீராக்கப்பட்ட சுங்கத் தரவுகளின்படி இறக்குமதிகளின் மீதான மொத்தச் செலவு 1988 இன் சிஎஉ 16,610 இலட்சத்துடன் (ரூ. 710,300 இலட்சம்) ஒப்பிடுகையில் 1989 இல் சிஎஉ 17,370 இலட்சமாக (ரூ. 802,250 இலட்சம்) விளங்கி 5 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இவ்வதிகரிப்பு நுகர்வுப் பொருட்களினதும் இடைநிலைப் பொருட்களினதும், இறக்குமதிகளிலேயே முழுமையாகப் பிரதிபலித்தது. மாறாக, 1989 இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவு 1988 இன் சிஎஉ 4,080 இலட்சத்திலிருந்து (ரூ. 174,380 இலட்சம்) 1989 இல் சிஎஉ 4,540 இலட்சத்திற்கு (ரூ. 209,620 இலட்சம்) ஓரளவு கூடுதலாக 11 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அரிசியினதும் சீனியினதும் இறக்குமதிகளுக்கான அதிகரித்த செலவுகளே இதற்கான பெருமளவு காரணமாக அமைந்தது. அரிசி இறக்குமதிகளின் மீதான செலவு 74 சதவீதத்தினால் சிஎஉ 740 இலட்சத்திற்கு கடுமையாக உயர்வடைந்தவேளையில் சீனி இறக்குமதிகள் மீதான செலவு சிஎஉ 940 இலட்சத்திற்கு 37 சதவீதத்தினால் அதிகரித்தது. அரிசி இறக்குமதிகளின் செலவு அதிகரிப்பிற்குத் தொகை (50 சதவீதம்), விலை (16 சதவீதம்) இரண்டினதும் அதிகரிப்பு காரணமாக அமைந்தது. சீனி இறக்குமதிகளின் செலவு உயர்வடைந்தமைக்கு விலை அதிகரிப்பே முழுக் காரணியாக விளங்கியது.

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவு 1988 இன் சிஎஉ 9,430 இலட்சத்திலிருந்து (ரூ. 403,250 இலட்சம்) 1989 இல் சிஎஉ 9,800 இலட்சத்திற்கு (ரூ. 452,550 இலட்சம்) 4 சதவீதத்தினால் அதிகரித்தது. கோதுமைத் தானியம், புடவைகள் ஆடைகள் என்பனவற்றின் இறக்குமதிகள் மீதான உயர்ந்த செலவே இதற்கான பெருமளவு காரணமாக விளங்கியது. இதேவேளையில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளின் மீதான செலவு 1988 இன் சிஎஉ 2,830 இலட்சத்திலிருந்து (ரூ. 120,810 இலட்சம்) 1989 இல்

சஎஉ 2,600 இலட்சத்திற்கு (ரூ. 120,180 இலட்சம்) 8 சதவீதத்தினால் குறைவடைந்தது. இவ்வாண்டில் கைத்தொழில் முயற்சிகள் குறைவாக நிறுவப்பட்டுள்ளமையைப் பெரும்பாலும் பிரதிபலிக்கும் வகையில், முக்கியமாகப் பொறிகளினதும் கருவிகளினதும் இறக்குமதிகளிலேயே இவ்வீழ்ச்சி பிரதிபலித்தது.

1989 இல் இலங்கையின் சென்மதி நிலுவை அபிவிருத்திகள் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதைவிடக் குறிப்பிடத்தக்களவு குறைவான பிரதிகூலங்களைக் கொண்டதாக விளங்கின. நடுவாண்டு முற்கணிப்பு நியதிகளில் பொதுவான பற்றாக்குறை கிட்டத்தட்ட சஎஉ 1,700 இலட்சமாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டிருக்கையில் சஎஉ 670 இலட்சங் கொண்ட பற்றாக்குறையுடனேயே ஆண்டு முடிவடைந்தது. 1989 இன் முதலரைப்பகுதியில் ஒதுக்குகளில் கணிசமான இழப்புக்கள் ஏற்பட்டதுடன் சென்மதி நிலுவையில் அதிகூடிய அழுத்தமொன்று காணப்பட்டது. எனினும், பொருளாதார உறுதிப்பாட்டு நடவடிக்கைகள், பாதுகாப்பு நிலைமையில் முன்னேற்றம் என்பன காரணமாகப் பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கை மீண்டும் உருவானதைத் தொடர்ந்து இரண்டாம் அரைப்பகுதியில் குறிப்பாகச் செத்தெம்பரிலிருந்து திடீர் மாற்றமொன்று அவதானிக்கப்பட்டது. 1989 யூன் இறுதியில் சஎஉ 1,250 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஆண்டின் இறுதியில் சஎஉ 2,240 இலட்சத்தினை அடைந்தன. இதேபோன்று மொத்த ஒதுக்குகள் யூன் இறுதியின் சஎஉ 3,850 இலட்சத்திலிருந்து 1989 திசெம்பர் இறுதியில் சஎஉ 4,470 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. சென்மதி நிலுவையின் நிலையில் ஏற்பட்ட இம்மீட்சியானது 1989 இல் இலங்கையின் பொருளாதாரச் செயலாற்றத்தின் அதி ஊக்கமளிக்கும் பண்புகளில் ஒன்றாகக் காணப்பட்டது.

சென்மதி நிலுவையின் வணிகக் கணக்கு 1988 இல் பதிவு செய்யப்பட்ட பற்றாக்குறையான சஎஉ 5,680 இலட்சத்திலிருந்து (ரூ. 24,268 இலட்சம்) 1989 இல் சஎஉ 5,420 இலட்சம் (ரூ. 247,160 இலட்சம்) பற்றாக்குறையைப் பதிவுசெய்ததோடு இது முன்னைய ஆண்டின் பற்றாக்குறையைவிட 5 சதவீதம் குறைவானதாகக் காணப்பட்டது. மாறாக, பணிகள் கணக்கிலான பற்றாக்குறை இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சஎஉ 1,140 இலட்சத்திலிருந்து (ரூ. 48,840 இலட்சம்) சஎஉ 1,170 இலட்சத்திற்கு (ரூ. 53,150 இலட்சம்) சிறிதளவால் உயர்வடைந்தது. சஎஉ 2,900 இலட்சமாக விளங்கிய (ரூ. 129,970 இலட்சம்) நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை பெரும்பாலும் 1988 இன் அதே மட்டத்திலேயே காணப்பட்டது. எனினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 1988 இன் 5.6 சதவீதத்திலிருந்து 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக அலுவல்சார் மாற்றல்கள் நீங்கலான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் மேலும் முனைப்பாக 8.5 சதவீதத்திலிருந்து 7.6 சதவீதத்திற்குக் குறைவடைந்தது.

அட்டவணை 1.3

## சென்மதி நிலுவையின் தொகுப்பு 1986—1989

பத்து இலட்சம் ரூபாய்களில் (சி. எ. உ, பத்து இலட்சம் அடைப்புக்குறிக்குள்)

| விடயங்கள் | 1986 | 1987 | 1988(அ) | 1989(ஆ) |
|---|---|---|---|---|
| வணிகப் பொருட்கள் (தேறிய) ... | —21,390 (—649) | —20,005 (—525) | —24,268 (—568) | —24,716 (—542) |
| காரணியல்லாப் பணிகள் (தேறிய) ... | 255 (8) | 74 (2) | 382 (8) | 591 (11) |
| காரணிப் பணிகள் (தேறிய) ... | —3,871 (—117) | —4,699 (—123) | —5,266 (—122) | —5,906 (—128) |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) ... | 7,983 (242) | 9,226 (242) | 10,187 (238) | 10,844 (234) |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) ... | 5,114 (153) | 5,311 (139) | 6,588 (154) | 6,190 (135) |
| நடைமுறைக் கணக்கு நிலுவை ... | —11,909 (—363) | —10,093 (—265) | —12,377 (—290) | —12,997 (—290) |
| மொத்த நிலுவை ... | —1,774 (—65) | —1,224 (—62) | —3,339 (—64) | —1,905 (—67) |

### சில முக்கிய குறிகாட்டிகள்

| | 1986 | 1987 | 1988(அ) | 1989(ஆ) |
|---|---|---|---|---|
| வர்த்தக மாற்று விகிதம் (1981=100) ... | 111 | 114 | 106 | 99 |
| தேறிய பெற்றோலிய இறக்குமதிகள் ... | 3,935 (120) | 6,124 (161) | 5,574 (130) | 6,134 (133) |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குக்குறை ... | 6.7 | 5.1 | 5.6 | 5.1 |
| மொத்த பன்னாட்டு ஒதுக்கு ... | 17,152 (492) | 18,479 (423) | 19,025 (428) | 23,390 (447) |
| பன்னாட்டு ஒதுக்குகள் – மாதங்களுக்கான இறக்குமதிகளில் ... | 3.5 | 3.2 | 3.1 | 3.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

பயணக் கணக்கில் ஏற்பட்ட மாற்றத்தைத் தவிர 1989இல் சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கின் செயலாற்றம் சிறிதளவு மாற்றத்தையே காட்டியது. பயணம் மற்றும் தொடர்பான பணிகளிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் 1988இன் சிஎஉ 20 இலட்சப் பற்றாக்குறையிலிருந்து 1989இல் சிஎஉ 30 இலட்ச மிகைக்கு அதிகரித்தன. 1989இன் இறுதி மாதங்களில் பாதுகாப்பு நிலைமை முன்னேற்றம் கண்டதைத் தொடர்ந்து, சுற்றுலா வருகைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டமையே இதற்கான முதன்மைக் காரணமாக விளங்கியது. இதே வேளையில் 1989 இல் முதலீட்டு வருமானம் மீதான தேறிய வெளிப்பாய்ச்சல் சிஎஉ 1,280 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிடச் சிறிது உயர்வானதாகக் காணப்பட்டது. மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பட்டியல் முதலீடுகளிலிருந்தான குறைந்த வட்டி வருமானங்களே இதற்கான முதன்மைக் காரணமாக விளங்கின. முன்னைய ஆண்டுகளைப்போலவே சிஎஉ 1,610

இலட்சமாக விளங்கிய வெளிநாட்டுக் கடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 4,180 இலட்சங் கொண்ட மொத்தப் பணிக்கொடுப்பனவுகளில் பெரும் பங்கிற்கு வகை கூறின.

மாற்றல்கள் மீதான குறைந்த பெறுகைகள் 1989 இல் சென்மதி நிலுவையின் குறிப்பிடத்தக்க பாதகமான அபிவிருத்தியாகக் காணப்பட்டன. 1989 இல் மாற்றல்களிலிருந்தான தேறிய பெறுகைகள் 1985 இலிருந்தான மிகத் தாழ்ந்த மட்டமான சிஎஉ 3,700 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 1989 இல் 12 சதவீதத்தினால் சிஎஉ 1,360 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்த அலுவல்சார் மாற்றல்களின் அதிகூடிய குறைப்பே இதற்கான பெருமளவு காரணமாக அமைந்தது. ஒப்பீட்டு அடிப்படையில் முக்கியமாக வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களின் பணவனுப்பல்களை உள்ளடக்கிய தனியார் மாற்றல்களிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகள் சிஎஉ 2,630 இலட்சமாக விளங்கி 1988 இனைவிடச் சிறிதளவில் மட்டுமே குறைவானதாகக் காணப்பட்டன.

இதேவேளையில் 1989 இல் சென்மதி நிலுவையின் மூலதனக் கணக்கின் அபிவிருத்திகள் 1988 இனைவிடக் குறைவான அனுகூலங்களையே கொண்டிருந்தன. 1989 இல் சிஎஉ 2,520 இலட்சமாக விளங்கிய தேறிய நாணய மூலதன உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டைவிட 30 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தன. இவ்வதிகரிப்பானது பெரும்பாலும் கோதுமை இறக்குமதிகளை நிதியிடுவதற்கான அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வர்த்தகக் கடன் ஒன்றினதும், வர்த்தகக் கொடுகடன்களினதும் அதிகரித்த பாவனையினால் ஏற்பட்டதாகும். மறுபுறத்தில் நேரடி முதலீடுகள் 34 சதவீதத்தினால் சிஎஉ 210 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் தனியார், நீண்டகாலக் கடன்களின் பேரிலான தேறிய வெளிப்பாய்ச்சல் சிஎஉ 230 இலட்சம் ஆகக் காணப்பட்டது. மூலவளங்களில் பெருந்தொகை தனியார் குறுங்கால மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்றவேளையில் அலுவல்சார் மூலதன உட்பாய்ச்சல்களில் 1988 இன் சிஎஉ 1,820 இலட்சத்திலிருந்து 1989 இல் சிஎஉ 1,670 இலட்சத்திற்கு 8 சதவீத வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இது பெரும்பாலும் செயற்றிட்டக் கடன்களின் கீழான பகிர்ந்தளிப்புக்களின் 12 சதவீதக் குறைப்பினால் ஏற்பட்டதாகும். நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சல்களினால் கிடைக்கத்தக்க மூலவளங்கள் நடைமுறைக்கணக்கின் பற்றாக்குறையைவிடக் குறைவானதாகக் காணப்பட்டமையால் மிகுதியை நாணய அசைவுகளின் மூலம் நிதியிடவேண்டியிருந்தது. 1989 இல் இவ்வாறு நிதியிடப்படவேண்டியிருந்த பற்றாக்குறை சிஎஉ 670 இலட்சமாகும். 1989 இன் இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் சிஎஉ 4,470 இலட்சமாக (ரூ. 233,890 இலட்சம்) விளங்கி முன்னைய ஆண்டின் மட்டமான சிஎஉ 4,280 இலட்சத்தினைவிட (ரூ. 190,250 இலட்சம்) முன்னேற்றமொன்றையும் பிரதிபலித்தன. எனினும் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் நிலைமை மோசமடைந்து மேலே குறிப்பிடப்பட்ட சென்மதி நிலுவையின் பொதுவான பற்றாக்குறையினைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

1989 இன் சென்மதி நிலுவை அபிவிருத்திகள் ஆண்டின் ஆரம்ப காலத்தில்
எதிர்பார்த்ததைவிடக் குறைவான பாதக நிலைமைகளைக் கொண்டிருந்தபோதி
லும் சிஎஉ 670 இலட்ச பொதுவான பற்றாக்குறையுடனேயே ஆண்டு முடிவுற்றது
என்பது ஆழ்ந்து கவனிக்கப்படவேண்டிய விடயமாகும். நாட்டின் சென்மதி
நிலுவை பற்றாக்குறையைக் கொண்டிருந்த தொடர்ச்சியான ஐந்தாவது ஆண்
டாக இது காணப்படுவதோடு ஏற்றுமதிச் செயலாற்றத்தின் கணிசமான மேம்பாடு
நீண்ட காலத்தில் சென்மதி நிலுவையின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்தும்
ஒரே தனி விடயங்களான திறமையான இறக்குமதிப் பதிலீடுகள், படுகடனை
உருவாக்கா மூலதனத்தின் போதுமான உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் மூல
மான தொடர்ச்சியான சீராக்க முயற்சிகளின் தேவையினையும் குறிப்பிட்டுக்
காட்டுகின்றது.

1989 இல் எல்லா முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் இலங்கை ரூபா
தேய்வடைந்தது. யப்பானிய யென்னுக்கெதிராக 6.6 சதவீதத்தினாலும், ஸ்டேர்
லிங் பவுணுக்கெதிராக 9.2 சதவீதத்தினாலும் இடையீட்டு நாணயமான ஐக்கிய
அமெரிக்க டொலருக்கெதிராக 17.4 சதவீதத்தினாலும் ரூபாவின் பெறுமதி
தேய்வடைந்தது. இது டியூச் மார்க்குக்கும், பிரான்சிய பிராங்கிற்குமெதிராக
22 சதவீதத்தினால் தேய்வடைந்த வேளையில் இவ்வாண்டில் இந்திய ரூபாவுக்
கெதிரான தேய்வு 7.4 சதவீதமாகக் காணப்பட்டது. 1989 இல் சிஎஉ இற்
கெதிராக ரூபாவின் பெறுமதி 16.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1989 இல் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் சிஎஉ 39,600
இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 7 சதவீத அதிகரிப்பைப் பதிவு
செய்தது. நடுத்தரகால நீண்டகாலப் படுகடன்கள் மொத்த வெளிநின்ற வெளி
நாட்டுப் படுகடனில் 90 சதவீதத்திற்கு மேல் வகை கூறின. எனினும், மத்திய
வங்கி பெற்ற குறுங்காலக் கடன் பெறுகைகளின் கணிசமான அதிகரிப்பினதும்
வர்த்தகக் கொடுகடன்களின் அதிகரித்த பாவனையினதும் காரணமாக 1989
இல் குறுங்காலக் கடன்கள் குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்தன. இதேவேளை
யில் 1989 இல் அமைப்புச் சீராக்க வசதிகளின்கீழ் சிஎஉ 670 இலட்சங் கொண்ட
தொகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்ட முதன்மைக் காரணத்தினால் பன்
னாட்டு நாணய நிதியத்திற்கான கடன்பாடுகளில் 10 சதவீத அதிகரிப்புக்
காணப்பட்டது. நடுத்தர நீண்டகாலக் கடன்களின் கடன் தீர்ப்பனவுக் கொடுப்
பனவுகளையும் அனைத்து வெளிநாட்டுக் கடன்களினதும் வட்டிக் கொடுப்பனவு
களையும் உள்ளடக்கிய படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 1989 இல் சிஎஉ 320
இலட்சத்தினால் சிஎஉ 3,710 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. பொருட்
களினதும் பணிகளினதும் வருவாய்களின் விகிதமாகப் படுகடன் பணிக்கொடுப்
பனவுகள் 1988 இன் 28.7 சதவீதத்திலிருந்து 1989 இல் 24.4 சதவீதத்திற்குக்
குறைவடைந்தன. பன்னாட்டு நாணய நிதியக்கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக
இந்த விகிதமானது முன்னைய ஆண்டின் 22.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில்
19.9 சதவீதமாகக் காணப்பட்டது.

இறைச் செயலாற்றத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றமானது 1989 இல் இலங்கையின் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளில் மிகச் சிறப்பான பண்பாக விளங்கியது. இது ஆரம்ப மதிப்பீடுகளையும் பொருளாதார உறுதி நிலைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழான இலக்குகளையும் விடச் சிறப்பானதாகக் காணப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையின் விகிதம் முன்னைய ஆண்டின் பற்றாக்குறையான 15.6 சதவீதத்துடனும், இலக்கிடப்பட்ட பற்றாக்குறையான 12.5 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் ரூ. 250,910 இலட்சத்திற்கு அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.0 சதவீதத்திற்குக் கட்டுப்படுத்தப்பட்டது. இந்த முன்னேற்றமானது அதிகரித்த வருவாய் குறைக்கப்பட்ட செலவு ஆகிய இரண்டினதும் கூட்டுவிளைவாகும். அரசிறை/மொ.உ.உ. விகிதம் இலக்கிடப்பட்ட 21.3 சதவீத மட்டத்திலேயே பெரும்பாலும் காணப்பட்டது. இதே வேளையில் அரசின் செலவினங்களில் கணிசமான குறைப்புக் காணப்பட்டதோடு இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக மொத்தச் செலவினத்தை ஆரம்ப இலக்கான 33.8 சதவீதத்திலிருந்து 31.6 சதவீதத்திற்குக் குறைப்பதற்கு இயலச் செய்தது. அரசின் செலவினக் குறைப்புக்களில் பெரும் பங்கு மூலதன ஒதுக்குகளில் பிரதிபலித்தது. இந்த அபிவிருத்திகளைத் தொடர்ந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை 1988 இன் 15.6 சதவீதத்திலிருந்து 1989 இல் 10.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையின் குறைப்பினைவிட பற்றாக்குறையை நிதியிடலிலும் சாதகமான போக்குகள் காணப்பட்டன. அதில் விரிவாக்கமற்ற மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்க மூலவளங்கள் பற்றாக்குறையை முழுமையாகவே நிதியிடப் போதுமானதாகக் காணப்பட்டதோடு விரிவாக்க நிதியிடலை நாட வேண்டிய அவசியம் முற்றாகவே நீக்கப்பட்டது.

1989 இல் அரசின் அரசிறை ரூ. 540,030 இலட்சமாக விளங்கி 29 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டியது. ரூ. 474,190 இலட்சமாக விளங்கிய வரி அரசிறை முன்னைய ஆண்டைவிட 32 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்ததோடு முன்னைய ஆண்டின் 86 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் மொத்த வருவாயில் கிட்டத்தட்ட 90 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. இறக்குமதித் தீர்வைகள், மொத்த விற்பனவு வரிகள், கலால் தீர்வைகள் போன்ற முக்கிய மூலங்களிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் 1988 இல் இதே மூலங்களிலிருந்தானவற்றைவிடக் கணிசமாக உயர்ந்து காணப்பட்டன. மத்திய வங்கியின் வசமுள்ள திறைசேரி உண்டியல்களின் மீது விதிக்கப்பட்ட வரியொன்றின் மூலம் ரூ. 23,450 இலட்சங் கொண்ட மேலதிக வரி இறையும் உருவாக்கப்பட்டது. இந்த மூலங்களிலிருந்தான அரசிறையின் வளர்ச்சியின் விளைவாக வரி/மொஉ.உ. விகிதம் 1988 இன் 16 சதவீதத்திலிருந்து 1989 இல் 18.9 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

செலவுப் பக்கத்தில் சம்பளங்களும் கூலிகளும், குடியிருப்புக்களுக்கான மாற்றல்கள், ஓய்வூதியங்கள், அரச கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் போன்ற முக்கிய நடைமுறைச் செலவு விடயங்கள் இவ்வாண்டில் கணிசமான வளர்ச்சியைக் காட்டின. சம்பளங்களும் கூலிகளும் மீதான செலவினம் ரூ. 129,810 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் இதே வகைச் செலவினத்தைவிட 30 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டதோடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக 1988 இன் 4.5 சதவீதத்திலிருந்து 1989 இல் 5.2 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இதேவேளையில் 1989 இல் மாற்றல் கொடுப்பனவுகள் ரூ. 160,990

**அரசின் இறைத்**

| விடயம் | 1984 | 1985 |
|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... ... ... | 37,354 | 39,556 |
| மொத்த அரசிறை ... ... ... ... | 34,061 | 36,249 |
| வரி அரசிறை ... ... ... ... | 29,939 | 30,442 |
| வரியல்லா அரசிறை ... ... ... ... | 4,122 | 5,807 |
| கொடைகள் ... ... ... ... | 3,293 | 3,307 |
| செலவினமும் மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... ... ... ... | 47,837 | 55,234 |
| நடைமுறை ... ... ... ... | 24,630 | 32,645 |
| மூலதனம் ... ... ... ... | 19,915 | 21,530 |
| மீள் கொடுப்பனவைக் கழித்தகடன் வழங்கல் ... ... | 3,292 | 1,059 |
| நடைமுறைக் கணக்கு மிகை/குறை (—) ... ... ... | 9,431 | 3,604 |
| வரவு செலவுத்திட்டக் குறை (கொடைக்கு முன்) ... ... ... ... | — 13,776 | — 18,985 |
| வரவு செலவுத்திட்டக் குறை (கொடைக்குப்பின்) ... ... ... ... | — 10,483 | — 15,678 |
| நிதியிடல் ... ... ... ... | 10,483 | 15,678 |
| வெளிநாட்டுக்கடன்பாடுகள் ... ... ... ... | 6,492 | 7,109 |
| உள்நாட்டுக்கடன்பாடுகள் ... ... ... ... | 3,991 | 8,569 |
| சந்தையல்லாக்கடன்பாடுகள் ... ... ... ... | 951 | — 1,801 |
| சந்தைக்கடன்பாடுகள் ... ... ... ... | 3,040 | 10,370 |
| வங்கியல்லா ... ... ... ... | 5,135 | 5,659 |
| வங்கி ... ... ... ... | — 2,095 | 4,711 |

**(மொத்த உள்நாட்டு**

| விடயம் | 1984 | 1985 |
|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... ... ... | 24.3 | 24.4 |
| மொத்த அரசிறை ... ... ... ... | 22.2 | 22.3 |
| வரி அரசிறை ... ... ... ... | 19.5 | 18.7 |
| வரியல்லா அரசிறை ... ... ... ... | 2.7 | 3.6 |
| கொடைகள் ... ... ... ... | 2.1 | 2.0 |
| செலவினமும் மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... ... ... ... | 31.1 | 34.0 |
| நடைமுறை ... ... ... ... | 16.0 | 20.1 |
| மூலதனம் ... ... ... ... | 13.0 | 13.3 |
| மீள் கொடுப்டனவைக் கழித்த கடன் வழங்கல் ... ... | 2.1 | 0.7 |
| நடைமுறைக் கணக்கு மிகை/குறை (—) ... ... ... | 6.1 | 2.2 |
| வரவு செலவுத் திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) ... ... ... ... | — 9.0 | — 11.7 |
| வரவு செலவுத் திட்டக்குறை (கொடைகளுக்குப் பின்) ... ... ... ... | — 6.8 | — 9.7 |
| நிதியிடல் ... ... ... ... | 6.8 | 9.7 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் ... ... ... ... | 4.2 | 4.4 |
| உள்நாட்டுக் கடன்பாடுகள் ... ... ... ... | 2.6 | 5.3 |
| சந்தையல்லாக் கடன்பாடுகள் ... ... ... | 0.6 | — 1.1 |
| சந்தைக் கடன்பாடுகள் ... ... ... ... | 2.0 | 6.4 |
| வங்கியல்லா ... ... ... ... | 3.3 | 3.5 |
| வங்கி ... ... ... ... | — 1.4 | 2.9 |

அட்டவணை 1.4

## தொழிற்பாடுகளின் தொகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில

| 1986 | 1987 | 1988 | 1989 ஒப்புதலளிக்கப் பட்ட மதிப்பீடுகள் | 1989 தற்காலிகம் | 1990 வரவு–செலவுத் திட்டம் |
|---|---|---|---|---|---|
| 40,991 | 46,822 | 48,337 | 61,720 | 60,410 | 68,062 |
| 37,238 | 42,145 | 41,749 | 56,120 | 54,003 | 61,262 |
| 31,272 | 35,119 | 35,946 | 48,729 | 47,419 | 55,920 |
| 5,966 | 7,026 | 5,803 | 7,391 | 6,584 | 5,342 |
| 3,753 | 4,677 | 6,588 | 5,600 | 6,407 | 6,800 |
| 59,193 | 63,894 | 76,532 | 90,322 | 79,093 | 89,861 |
| 33,966 | 39,560 | 46,132 | 56,619 | 54,981 | 64,161 |
| 23,236 | 22,816 | 22,878 | 28,694 | 19,644 | 21,053 |
| 1,991 | 1,518 | 7,522 | 5,009 | 4,468 | 4,647 |
| 3,272 | 2,585 | — 4,383 | — 499 | — 979 | — 2,899 |
| — 21,956 | — 21,749 | — 34,783 | — 34,202 | — 25,091 | — 28,599 |
| — 18,204 | — 17,072 | — 28,195 | — 28,602 | — 18,684 | — 21,799 |
| 18,204 | 17,072 | 28,195 | 28,602 | 18,684 | 21,799 |
| 9,061 | 5,716 | 7,128 | 12,004 | 5,926 | 10,558 |
| 9,143 | 11,356 | 21,065 | 16,598 | 12,758 | 11,241 |
| — 669 | 1,415 | 1,413 | — | 227 | — |
| 9,812 | 9,941 | 19,652 | 16,598 | 12,529 | 11,241 |
| 6,765 | 6,400 | 9,227 | 13,203 | 13,648 | 10,199 |
| 3,047 | 3,541 | 10,425 | 3,395 | — 1,119 | 1,042 |

உற்பத்தியின் சதவீதமாக)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22.8 | 23.8 | 21.7 | 23.3 | 24.1 | 24.0 |
| 20.8 | 21.4 | 18.7 | 21.1 | 21.6 | 21.6 |
| 17.4 | 17.9 | 16.1 | 18.4 | 19.0 | 19.7 |
| 3.3 | 3.6 | 2.6 | 2.8 | 2.6 | 1.9 |
| 2.1 | 2.4 | 3.0 | 2.1 | 2.6 | 2.4 |
| 33.0 | 32.5 | 34.3 | 34.0 | 31.6 | 31.7 |
| 18.9 | 20.1 | 20.7 | 21.3 | 22.0 | 22.6 |
| 13.0 | 11.6 | 10.3 | 10.8 | 7.9 | 7.4 |
| 1.1 | 0.8 | 3.4 | 1.9 | 1.8 | 1.6 |
| 1.8 | 1.3 | — 2.0 | — 0.2 | — 0.4 | — 1.0 |
| — 12.2 | — 11.1 | — 15.6 | — 12.9 | — 10.0 | — 10.1 |
| — 10.1 | — 8.7 | — 12.6 | — 10.8 | — 7.5 | — 7.7 |
| 10.1 | 8.7 | 12.6 | 10.8 | 7.5 | 7.7 |
| 5.1 | 2.9 | 3.2 | 4.5 | 2.4 | 3.7 |
| 5.1 | 5.8 | 9.4 | 6.3 | 5.1 | 4.0 |
| — 0.4 | 0.7 | 0.6 | — | 0.1 | — |
| 5.5 | 5.1 | 8.8 | 6.3 | 5.0 | 4.0 |
| 3.8 | 3.3 | 4.1 | 5.0 | 5.5 | 3.6 |
| 1.7 | 1.8 | 4.7 | 1.3 | — 0.4 | 0.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 25 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 143,460 இலட்சமாக விளங்கி 14 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தன.எனினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வட்டிக் கொடுப்பனவுகள் 5.6 சதவீதமாக விளங்கி முன்னைய ஆண்டின் அதே மட்டத்திலேயே மாறாது காணப்பட்டன. இவ் வதிகரிப்புக்களைப் பிரதிபலிக்கும்வகையில் அரசின் மொத்த நடைமுறைச் செலவு ரூபா 549,810 இலட்சமாக விளங்கி 1988 இனைவிட 19 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்ததோடு நடைமுறைச் செலவு/மொ.உ.உ. விகிதம் முன்னைய ஆண்டின் 20.7 சதவீதத்திலிருந்து 1989 இல் 22.0 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. எனினும், முன்னேற்றமடைந்த இறைச் செயலாற்றத்தின் காரணமாக வரவு செலவுத் திட்டத்தில் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை 1988 இன் பற்றாக் குறையான ரூ. 43,830 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 9,790 இலட்சத்திற்குக் குறைக்கப்பட்டது.

நடைமுறைச் செலவினத்திற்கு மாறாக, 1989 இல் மொத்த மூலதனச் செலவு ரூ. 196,440 இலட்சமாக விளங்கி 14 சதவீத வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. இதன்படி, மூலதனச் செலவு/மொ.உ.உ. விகிதம் 1988 இன் 10.3 சதவீதத்திலிருந்து 1989 இல் 7.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் நிலவிய அமைதியின்மையின் காரணமாகப் புத்தாக்க நிகழ்ச்சித் திட்டங்கள் வீதி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் போன்ற வெளிநாட்டினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் காணப்பட்ட பிரச்சினைகளே மூலதனச் செலவின் வீழ்ச்சிக்குப் பெருமளவு காரணங்களாகின.

மூலதனச் செலவின் குறைப்பிற்கிடையிலும் அரசின் மொத்தச் செலவினமும் மீள் கொடுப்பனவு கழிக்கப்பட்ட கடன் வழங்கல்களும் ரூ. 790,930 இலட்சமாக விளங்கி 1988 இனைவிடச் சிறிதளவான 3 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சார்பாக மொத்தச் செலவும் மீள் கொடுப்பனவு கழிக்கப்பட்ட கடன் வழங்கலும் 1988 இன் 34.3 சதவீதத்திலிருந்து 1989 இல் 31.6 சதவீதத்திற்கு வீழ்ச்சிதடைந்தது. அரசிறையினதும் செலவினதும் பாய்ச்சல்களின் மொத்த வெளிப்பாடு ரூ. 250,910 இலட்சங் கொண்ட (கொடைகளின் முன்) வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை உருவாக்குவதாகும். இது 1988 இல் பதிவு செய்யப்பட்ட பற்றாக்குறையான ரூ. 342,020 இலட்சத்திலிருந்தும் 1989 இற்கு இலக்கிடப்பட்ட பற்றாக் குறையான ரூ. 312,510 இலட்சத்திலிருந்தும் கணிசமானளவு குறைவானதாகும். இதன்படி வரவுசெலவுப் பற்றாக்குறை/மொ.உ.உ. விகிதம் 1988 இன் 15.6 சதவீதத்திலிருந்து 1989 இல் 10.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பற்றாக்குறையை நிதியிடலில் ரூ. 59,260 இலட்சங் கொண்ட தொகை சலுகைக் கடன்களின் வடிவில் வெளிநாட்டு மூலங்களிலிருந்து திரட்டப்பட்டதோடு இது 1988 இல் பயன்படுத்தப்பட்ட தொகையினைவிட 17 சதவீதம் குறைவானதாகக் காணப்பட்டன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சார்பாக வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்கான வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் முன்னைய ஆண்டில் கடனாகப் பெறப்பட்ட 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.4 சதவீதமாகக் காணப்பட்டன. இதேவேளையில் பற்றாக்குறையை நிதியிடுவதற்காக உள்நாட்டு மூலங்களிலிருந்து ரூ. 127,580 இலட்சங் கொண்ட தொகையொன்று பெறப்பட்டது. வங்கியல்லாத்துறையின் பங்களிப்புக்கள் ரூ. 136,480 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 47 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டன. இத்தொகையில் ரூ. 48,750 இலட்சம் ரூபாக் கடன்களினூடாகத் திரட்டப்பட்ட

தோடு ரூ. 89,290 இலட்சம் திறைசேரி உண்டியல்கள் மூலமானதாகக் காணப் பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வங்கியல்லாத்துறையின் பங்களிப்பு 1988 இன் 4.1 சதவீதத்திலிருந்து 1989 இல் 5.5 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. பற்றாக்குறையை நிதியிடுவதில் வங்கியல்லாத்துறை முக்கிய உள்நாட்டு மூலமாக விளங்கியவேளையில் 1989 இல் வங்கித்தொழில்துறைக்கு ரூ. 11,190 இலட்சங் கொண்ட மீள் கொடுப்பனவு ஒன்று காணப்பட்டமையால் வங்கித்தொழில்துறையிலிருந்தான பங்களிப்பு எதிர்க்கணியமாகக் காணப்பட்டது. வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக வங்கித்தொழில் துறையிலிருந்து ரூ. 104,250 இலட்சத்தினை (மொ.உ.உ. வின் 4.7 சதவீதம்) அரசு பயன் படுத்திய முன்னைய ஆண்டின் நிலைக்கு முற்றிலும் எதிர்மாறானதாகக் காணப் பட்டது.

1989 இறுதியில் வெளிநின்ற அரச படுகடன் ரூ. 2,723,050 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் இறுதியில் வெளிநின்ற படுகடனைவிட 21 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. ரூ. 1,175,610 இலட்சமாக விளங்கிய மொத்த உள்நாட்டுப் படுகடன் 19 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்த வேளையில் ரூ. 1,547,440 இலட்சமாக விளங்கிய வெளிநாட்டுப் படுகடன் 23 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. மொத்தப் படுகடனில் குறுங்காலப் படுகடனின் பங்கு 1988 இன் 49 சதவீதத்திலிருந்து 1989 இல் 54 சதவீதத்திற்கு உயர் வடைந்து 1989 இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கான நிதியங்களைத் திரட்டுவதில் ரூபாப் பிணைகளைவிடத் திறைசேரி உண்டியல்களில் வெகுவாகத் தங்கியிருந்தமையை பெருமளவில் பிரதிபலித்தது. 1989 இறுதியில் மொத்த வெளிநின்ற அரச படுகடனின் 43 சதவீதத்திற்கு உள்நாட்டுப் படுகடன் வகை கூறியது. உள்நாட்டுப் படுகடனில் உள்நாட்டு நடுத்தரகால, நீண்டகாலக் கடன்களை முழுமையாகவே உருவாக்கிய ரூபாப் பிணைகளின் மீதான வெளி நின்ற பொறுப்புக்கள் ரூ. 542,170 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் மட் டத்தினைவிட 9.4 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் ரூபாப் பிணைகள் ஊடாக ரூ. 86,720 இலட்சம் கொண்ட மொத்தத் தொகையொன்று திரட்டப்பட்டது.எனினும்,இவ்வாண்டில் ரூபாக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் ரூ. 37,970 இலட்சமாக விளங்கியமையால் ரூபாக் கடன்களின் பேரிலான வெளிநின்ற படுகடன் ரூ. 48,750 இலட்சத்தினால் மட்டுமே உயர்வடைந்தது.

அரசின் குறுங்காலக் கடன் பெறுகைகளுக்கான முதன்மைக் கருவியாகிய திறைசேரி உண்டியல்களின் வழங்கல்களின் மூலம் திரட்டப்பட்ட மூலவளங்கள் ரூ. 135,460 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டில் திரட்டப்பட்ட மூல வளங்களின் அதே அளவிலேயே பெரும்பாலும் காணப்பட்டன. எனினும், திறை சேரி உண்டியல்களுக்கு வங்கித்தொழில் முறையிலிருந்தான பங்களிப்பு ரூ. 35,850 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் உதவுதொகையாகிய ரூ. 112,490 இலட்சத்தினைவிடக் கணிசமாகக் குறைவடைந்திருந்தது. 1988 இன் ரூ. 26,780 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் திறைசேரி உண்டியல்களில் வங்கியல்லாத்துறை யினாலான ரூ. 99,600 இலட்ச முதலீடு 1989 இன் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாக விளங்கியது. திறைசேரி உண்டியல்களின் மீதான வெளிநின்ற பொறுப்புக்கள் 1988 இறுதியின் ரூ. 437,000 இலட்சத்திலிருந்து 1989 இறுதியில் ரூ. 572,460 இலட்சத்திற்கு அதிகரித்தவேளையில் மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண் டியல் உடைமைகள் ரூ. 332,700 இலட்சத்திலிருந்து ரூ. 340,980 இலட்சத்திற்கு சிறிதளவால் மட்டுமே உயர்வடைந்தன. இதன்படி வெளிநின்ற திறைசேரி உண்டியல்களில் மத்திய வங்கி உடைமைகளின் பங்கு 1988 இன் 76 சதவீதத்தி லிருந்து 1989 இல் 60 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1989 இறுதியில் அரசின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ரூ.15,47,440 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 23 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. மொத்தப் பொதுப்படுகடனில் வெளிநாட்டுப் படுகடனின் பங்கு 1988 இன் 56 சதவீதத்திலிருந்து 1989 இல் 57 சதவீதத்திற்குச் சிறிதளவால் உயர்வடைந்தது. 1989 இல் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்கான வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் ரூ. 59,260 இலட்சமாக மட்டுமே காணப்பட்ட போதிலும் இவ்வாண்டில் செலாவணி வீத மாறுபாடுகளின் விளைவாக ஏற்பட்ட ரூ. 231,620 இலட்சம் கொண்ட மேலதிக ரூபாப் பொறுப்பின் காரணமாக ஆண்டின் இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ரூ. 290,870 இலட்சம் கொண்ட கணிசமான அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தது. 1989 இறுதியில் மொத்த வெளிநாட்டுப் படுகடன் ரூ. 1,102,940 இலட்சம் கொண்ட செயற்றிட்டக் கடன்களையும் ரூ. 444,500 இலட்சம் கொண்ட செயற்றிட்டமல்லாக் கடன்களையும் உள்ளடக்கியிருந்தது.

கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும்வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய அரசின் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 1989 இல் ரூ. 242,060 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 9 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டது. எனினும்,மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக அரச படுகடன் மீதான பணிக்கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் மட்டமான 10 சதவீதத்திலேயே காணப்பட்டன.

பணநிரம்பல் வளர்ச்சி வீதத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க மெதுவான போக்கு 1989 இன் பேரண்டப் பொருளாதார அபிவிருத்தியின் மிகச் சிறப்பான பண்பாகக் காணப்பட்டது. 1988 இன் இறுதியில் 29 சதவீதமாகக் காணப்பட்ட குறுகிய பணநிரம்பலின் ($M_1$) ஆண்டு வளர்ச்சி வீதம் 1989 இன் இறுதியில் 9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதே போக்கினைப் பின்பற்றி விரிந்த பணநிரம்பலின் ($M_2$) வளர்ச்சி வீதமும் இதே காலப்பகுதியில் 16 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1988 இல் பேரண்டப் பொருளாதாரத்தின் உறுதிப்பாடு மோசமாகத் தளர்வுற்றதைத் தொடர்ந்து இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட உறுதிப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் பின்னணியில் நோக்குகையில் இவ்வபிவிருத்திகள் மிகவும் மீள் நம்பிக்கையளிக்கக் கூடியனவாகக் காணப்பட்டன. நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சி வீதங்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான இவ்வாண்டின் இலக்குடன் பெருமளவில் இணங்குவதாகக் காணப்பட்டதோடு அதன் மூலம் நிகழ்ச்சித் திட்டத்தின் ஏனைய உறுதிப்பாட்டு குறிக்கோள்களை எய்தவும் உதவின.

1989 இல் பணநிரம்பல் வளர்ச்சி வீதத்தின் மெதுவான போக்கு குறுகிய நாணயக்கூட்டிலேயே வெகுவாகத் தென்பட்டது. போலி நாணய வளர்ச்சியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மீட்சியின் காரணமாக விரிந்த பணநிரம்பலின் வளர்ச்சி வீதத்தில் மிகவும் மிதமான குறைவேகம் காணப்பட்டது. 1988 இல் ரூ. 23,150 இலட்சம் அல்லது 7 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்த போலி நாணயம் 1989 இல் ரூ. 55,280 இலட்சம் அல்லது 16 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. ரூ. 62,490 இலட்சத்தினால் அல்லது 21 சதவீதத்தினால் அதிகரித்த ஏனைய தனியார் துறை கூறுகளின் தவணை, சேமிப்பு வைப்புக்களில் இது முழுமையாகப் பிரதிபலித்தது.

பொதுமக்கள் வசமுள்ள நாணயத்திலேயே M 1 இன் விரிவாக்கம் செறிந்திருந்த முன்னைய ஆண்டின் அனுபவத்திற்கு நேர்மாறாக 1989 இல் ரூ, 17,960 இலட்சத்தினால் அல்லது 13 சதவீதத்தினால் அதிகரித்த கேள்வி வைப்புக்

அட்டவணை 1.5

## நாணய அளவுகள் 1984—1989

ரூபா பத்து இலட்சங்களில்

| விடயம் | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 |
|---|---|---|---|---|---|---|
| **உள்நாட்டுக் கொடுகடனிலேற்பட்ட மாற்றம்** ... | **633** | **9,300** | **4,883** | **11,457** | **21,302** | **5,454** |
| அரசுக்கான தேறிய கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு ... | —2,979 | 5,793 | 2,198 | 4,502 | 9,017 | 54 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ... | —237 | 290 | 301 | 2,627 | 3,421 | 3,075 |
| கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் அதிகரிப்பு ... | —255 | —263 | 120 | —301 | 195 | —140 |
| ஏனைய தனியார் துறைக்கான கொடுகடன் அதிகரிப்பு ... | 4,104 | 3,480 | 2,263 | 4,629 | 8,669 | 2,465 |
| **தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம்** ... | **6,796** | **—768** | **—3** | **111** | **—2,233** | **—2,326** |
| **மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றம்** ... | **7,429** | **8,532** | **4,830** | **11,568** | **19,069** | **3,128** |
| விரிந்த பணநிரம்பலில் (M2) ஏற்பட்ட அதிகரிப்பு ... | 6,170 | 4,982 | 2,451 | 7,475 | 9,611 | 8,487 |
| ஏனைய பொறுப்புக்களில் (தேறிய) ஏற்பட்ட அதிகரிப்பு ... | 1,259 | 3,551 | 2,428 | 4,093 | 9,458 | 5,359 |

## நாணய அளவுகளில் சதவீத அதிகரிப்பு

| | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 |
|---|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டுக் கொடுகடனின் சதவீத அதிகரிப்பு ... | 1.3 | 18.6 | 8.2 | 17.9 | 28.2 | 5.6 |
| மொத்த சொத்துக்கள், பொறுப்புக்களின் சதவீத அதிகரிப்பு ... | 14.2 | 14.2 | 7.1 | 15.8 | 22.4 | 3.0 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசின் சதவீதம் ... | —470.4 | 62.3 | 45.0 | 39.3 | 42.3 | 0.1 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசு அல்லாத்துறையின் சதவீதம் ... | 570.4 | 37.7 | 55.0 | 60.7 | 57.7 | 99.9 |
| விரிந்த பண நிரம்பலின் (M2) சதவீத அதிகரிப்பு ... | 16.6 | 11.4 | 5.1 | 14.7 | 16.4 | 12.4 |
| குறுகிய பண நிரம்பலின் (M1) சதவீத அதிகரிப்பு ... | 14.1 | 11.5 | 12.9 | 18.4 | 29.1 | 9.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கூறிலேயே M 1 இன் வளர்ச்சி பிரதிபலித்தது. இதன் விளைவாக M 1 இல் நாணயக்கூறின் பங்கு 1988 இன் 57 சதவீதத்திலிருந்து 1989 இல் 56 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பணநிரம்பலில் நாணயக்கூறின் இவ்வீழ்ச்சிக்கு, குறிப்பாக 1989 இன் இறுதிக் காலாண்டில் நாடு குழப்பநிலையிலிருந்து முன்னேறியதைத் தொடர்ந்து கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்காகத் திரவக் காசை வைத்திருப்பதற்கான பொது மக்களின் விருப்பத் தேர்வு குறைவடைந்தமையைக் காரணமாகக் குறிப்பிடலாம்.

உள்நாட்டுக் கொடுகடனின் வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி 1989 இன் நிரம்பலின் வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட மெதுவான போக்கிற்கான குறிப்பிடத்தக்க முக்கிய காரணியாக விளங்கியது. 1988 இன் ரூ. 213,020 இலட்சம் அல்லது 28 சதவீத கணிசமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1989 இல் உள்நாட்டுக் கொடுகடன் ரூ. 54,540 இலட்சத்தால் அல்லது 6 சதவீதத்தால் மட்டும் விரிவடைந்தது. அரசதுறையும், தனியார் துறையும் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவு குறைந்த மட்டங்கள் கொண்ட வங்கிக் கொடுகடனைப் பயன்படுத்தின. 1988 இல் வங்கித்தொழில் முறையிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 90,170 இலட்சத்தால் அல்லது 33 சதவீதத்தால் அதிகரித்த நிலைமைக்கு முழு மாறாக 1989 இல் அவ்வாறான கொடுகடன் ஒரு சிறிதளவான ரூ. 540 இலட்சத்தால் அதிகரித்தது. இதே போக்கினைத் தொடர்ந்து, தனியார்துறைக்கான மொத்தக் கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ. 122,850 இலட்சம் அல்லது 25 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1989 இல் ரூ. 54,000 இலட்சத்தால் அல்லது 9 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது.

1989 இல் வங்கிக் கொடுகடன் வழங்கலில் ஏற்பட்ட வரவேற்கத்தக்க அபிவிருத்திகளில் ஒன்றாக, வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக அரசால் பயன்படுத்தப்பட்ட வங்கிக் கொடுகடனின் அளவில் ஏற்பட்ட மிகக் கூடிய வீழ்ச்சி விளங்கியது. அதன் கடன்பாட்டுத் தேவைகள் தொடர்ந்தும் உயர்ந்து விளங்கியபோதிலும் பெருமளவில் திறைசேரி உண்டியல் சந்தையின் தீவிரப் படுத்தப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக அதன் கொடுகடன் தேவைகளின் பெரும்பகுதியை வங்கியல்லா தனியார்துறையிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்தது. மொத்தமாக வங்கிமுறையில் இருந்து அரசிற்கான மொத்தக் கொடுகடன் 1988 இன் ரூ. 127,920 இலட்ச அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 4,290 இலட்சத்தால் மட்டும் அதிகரித்தது. இது கட்டியெழுப்பப் பட்ட வைப்புக்களான ரூ. 3,750 இலட்சத்துடன் சேர்ந்து, அரசு வங்கித் துறையை நாடிநிற்றலின் தேறிய தேவையை இவ்வாண்டில் ரூ. 540 இலட்சம் கொண்ட மிகக் குறைந்த அளவிற்குக் குறைத்தது. இது பொருளாதாரத்தில் உறுதிப்படுத்தும் நோக்கங்களை அடைதல், பணவீக்கத் தாக்கங்களைக் கட்டுப் படுத்தல் ஆகியவற்றைக் கருத்திற் கொள்கையில் இது மிகவும் வரவேற்கத்தக்க அபிவிருத்திகளில் ஒன்றாகும். வங்கி முறையிலிருந்து, அரசு தொடர்ந்து பெற்ற பெருமளவு கடன்பாடுகள், பொருளாதாரத்தில் அளவுக்கதிகமான திரவத்தன்மையை உருவாக்கும் முக்கிய காரணியாக விளங்கி பணநிரம்பல், விலைகள், சென்மதி நிலுவை என்பன மீது அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்துவதனால் இறைக் கட்டுப்பாட்டுத் தேவை இருப்பதை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகள் கடந்த சில ஆண்டுகளாக அரசின் கவனத்திற்குத் திரும்பத்திரும்பக் கொண்டு வந்தன.

அரசிற்கான கொடுகடன் அபிவிருத்திக்கு இணையாகத் தனியார்துறைக்கான கொடுகடனின் வளர்ச்சியும் 1989இல் குறிப்பிடத்தக்க வேகக் குறைவைப் பதிவு செய்தது. வங்கித்தொழில் முறையிலிருந்து ''ஏனைய தனியார்துறை கூறுகள்'' (தனியார் துறை மாத்திரம்) பயன்படுத்திய கொடுகடனின் அளவு 1988இன் வளர்ச்சியான ரூ. 86,690 இலட்சம்அல்லது 22 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில்ரூ. 24,650 இலட்சத்தால் அல்லது 5 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது. தனியார்துறையில் பயன்படுத்தப்பட்ட கொடுகடன் குறைந்தமைக்கு இவ்வாண்டில் தொழிற்பாட்டில் இருந்த கட்டுப்பாடானநாணயக்கொள்கையும் நாட்டில் தொடர்ந்து நிலவிய குழப்ப நிலைகளால் தனியார்துறையிடமிருந்து ஏற்பட்ட கொடுகடனிற்கான குறைந்த கேள்வியும் ஓரளவு காரணிகளாக விளங்கின.

இதே வேளையில் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 1989 இல் ரூ. 30,750 இலட்சத்தால் அல்லது 29 சதவீதத்தால் விரிவடைந்தது. இதற்கு முக்கிய காரணியாகப் பரவலான குழப்ப நிலைமைகளால் பணப்பாய்ச்சல்கள் தடைப்பட்ட சில கூட்டுத்தாபனங்களின் தொழிற்படு மூலதனத் தேவைகளை ஈடுசெய்வதற்கான கொடுகடனிற்கான அதிகரித்த கேள்வி விளங்கியது. உணவு ஆணையாளரிடமிருந்து கூ.மொ.வி. நிலையத்திற்கு உணவு இறக்குமதிகளின் பொறுப்புக்கள் மாற்றப்பட்டதைத் தொடர்ந்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளராக விளங்கிய கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனத்தின் (கூ.மொ.நி.) அதிகரித்த பங்கும் இத்துறைக்கான வங்கிக் கொடுகடனின் மட்டத்தின் அதிகரிப்புக்குக் காரணமாயிற்று. 1989 இல் கூ.மொ. விற்பனை நிலையத்திற்கான முற்பணங்கள் ரூ. 12,690 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில், இரு அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களுக்கான முற்பணங்கள் ரூ. 11,890 இலட்சத்தால் அதிகரித்தன. இதே வேளையில், கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ. 1,950 இலட்ச அதிகரிப்பிற்கு முரணாக, 1989 இல் ரூ. 1,400 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தது.

இரண்டாவது தொடர்ச்சியான ஆண்டாக வெளிநாட்டுத்துறையின் தொழிற்பாடுகள், 1989 இல் பண நிரம்பல்மீது ஒரு சுருக்கத் தாக்கத்தினை ஏற்படுத்தின. எல்லாமாக வங்கித்தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் (தே.வெ.சொ.) 1989 இல் ரூ. 23,260 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டில் தேறிய வெளிநாட்டுச் சொத்து நிலைமை குறிப்பிடத்தக்க தளம்பல்களைக் காட்டியது. வங்கித்துறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1988 திசெம்பரின் ரூ. 70,580 இலட்சத்திலிருந்து 1989 ஒகத்தில் ரூ. 9,760 இலட்சத்திற்குக் கடுமையாக வீழ்ச்சியடைந்து, பின்பு 1989 இறுதியில் ரூ. 47,320 இலட்சத்தை அடைந்து மீட்சி பெற்றது.

குறுங்கால பணச் சந்தையின் தீவிர தொழிற்பாடுகளால் 1989 இல் வர்த்தக வங்கிகள் வைப்புக்களைத் திரட்டுவதில் கடுமையான போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதேவேளையில், அளவுக்கதிகமான கொடுகடன் உருவாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், சென்மதி நிலுவை மீதான தாக்கத்தைக் குறைப்பதற்கும் மத்திய வங்கி ஒரு கட்டுப்பாட்டு நாணயக் கொள்கை நிலையைப் பின்பற்றியது. குறிப்பாக இவ்வாண்டின் மூன்றாம் காலாண்டில், உள்நாட்டு வங்கிகளுக்கிடையில் உள்ள கடன்பாடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டவாறு இவ்வபிவிருத்திகள் வங்கித்தொழில் முறையினுள் திரவ நிலைமைகளில் தட்டுப்பாட்டை விளைவித்தன. செலாவணி வீதம் தொடர்ந்து பெறுமதி வீழ்ச்சியடைந்து செல்வதிலிருந்து அச் சந்தர்ப்பத்தில் நன்மை பெறுவதற்காகச் சில ஏற்றுமதியாளர்களால் ஏற்றுமதிப் பெறுகைகள்

காலம் தாழ்த்திப் பெறப்பட்டதனாலும், சில வர்த்தக வங்கிகள் செலாவணி வீதத் தேய்வினால் நன்மையடையும் பொருட்டு அளவுக்கதிகமாக வெளிநாட்டிலுள்ள தொழிற்படு நிலுவைகளைப் பேணும் வழக்கத்தினைக் கொண்டிருந்தமையாலும் இந்நிலை மேலும் பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆண்டின் இறுதி மாதங்களில் வைப்புக்களின் வளர்ச்சி வேகம் மீண்டும் அடையப்பட்டதாலும் ஏற்றுமதிப் பெறுகைகளின் வரவுகள் அதன் வழமையான நிலைக்குத் திரும்பியதாலும் வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மை மீதான தாக்கம் ஓரளவிற்குக் குறைந்தது. எனினும், பற்றாக்குறையுள்ள வங்கிகளிலிருந்து குறுகியகால நிதியங்களுக்கான தேவையும், ஏனைய துணைச் சந்தைகளில் நிலவும் தொடர்ச்சியான உயர்ந்த வட்டி வீதங்களும் வங்கிகளுக்கிடையான அழைப்புப் பணச் சந்தையின் வட்டி வீதங்களை இவ்வாண்டில் பல தடவைகள் உயர்ந்த அளவில் நிலைத்திருக்கச் செய்தன.

இவ்வாண்டில் உறுதித் தன்மையைப் பேணும் முயற்சியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள் பொறுப்புக்கள் முன்னைய ஆண்டின் அதிகரிப்பான ரூ. 98,880 இலட்சத்துடன் அல்லது 22 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 74,390 இலட்சத்தால் அல்லது 13 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது. மத்திய வங்கியின் சொத்துக்களது வளர்ச்சியின் இன்னொரு குறிப்பிடத்தக்க தன்மை யாதெனில் மொத்தச் சொத்துக்களின் அதிகரிப்பில் கணிசமான பங்கு வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களில் பிரதிபலிக்கப்பட்டமையாகும். மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு (மொத்தம்) 1989 இல் ரூ. 23,430 இலட்சம் அல்லது 31 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து, கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட சொத்துக்களின் தொடர்ச்சியான வீழ்ச்சியின் போக்கை நேர்மாறாக்கியது. மறுபக்கத்தில், கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட கணிசமான அதிகரிப்புக்களுக்குப் பெருமளவு முரணாக, வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் (ஏனைய சொத்துக்கள் கணக்குகள் நீங்கலாக) 1989 இல் ரூ. 7,610 இலட்சம் அல்லது 2 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பை மட்டும் காட்டியது. அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் அரச, அரச உத்தரவாதப் பிணைகள் மீதான முதலீடுகளும் 1989 இல் ரூ. 3,020 இலட்சத்தால் மட்டும் அதிகரித்து, இவ்வாண்டில் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காகஅரசு மத்திய வங்கியின் கொடுகடனைப் பாவிப்பதைக் கணிசமாகக் குறைத்ததனைப் பிரதிபலித்தது. 1988 இல் ஒத்த அதிகரிப்பு ரூ. 102,820 இலட்சமாக விளங்கியது. அதேவேளையில், வர்த்தக வங்கிகளுக்கான மத்திய வங்கியின் குறுகிய காலக் கடன்கள் 1988 இன் ரூ, 2,160 இலட்ச அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 340 இலட்சத்தால் மட்டும் அதிகரித்தது. 1989 இல் மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் பெரும் பகுதி வங்கியின் ''ஏனைய சொத்துக்கள் கணக்குகளில்'' பிரதிபலிக்கப்பட்டது. இது 1988 இன் ரூ. 4,510 இலட்ச அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 43,340 இலட்சத்தால் அதிகரித்தது.

பொறுப்புக்கள் பக்கத்தில், கூடியளவு சாதகமான நிலையான போக்குகளைப் பிரதிபலித்து வங்கியின் நாணயப் பொறுப்புக்கள் 1988 இன் ரூ. 106,080 இலட்சம் அல்லது 47 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 23,440 இலட்சத்தால் அல்லது 7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ரூ. 7,550 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில், வைப்புக்களின் பொறுப்புக்கள் ரூ. 15,900 இலட்சத்தால் அதிகரித்தன. 1988இல் ஒத்த அதிகரிப்புக்கள் முறையே ரூ. 53,080 இலட்சமாகவும் ரூ. 53,000 இலட்சமாகவும்